# வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை

# வருடாந்த அறிக்கை – 2023

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**இலக்கம் 01,**

**டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**

**கொழும்பு -10.**

## தொலை நோக்கு

அனைவருக்கும் பாதுகாப்பான வீதி அமைப்பு

## பணிக் கூற்று

பேண்தகு அபிவிருத்தியின் பொருட்டு வீதி விபத்துக்களற்ற சமூகமொன்றை உருவாக்குதல்"

## வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் அலுவலகம்

இலக்கம் 01 , டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை கொழும்பு 10, என்ற முகவரியில் அமைந்துள்ள போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்குரிய வளாகத்தில் வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை நிறுவப்பட்டுள்ளது.

**அலுவலக முகவரி**
**வீதி பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை**
**இலக்கம் . 01,**
**டி.ஆர் . விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

**தொலைபேசி இலக்கம் - 0112696890 / 01126887109 / 0112674162**

**தொலைநகல் இலக்கம் - 0112680163**

**மின்னஞ்சல் முகவரி - ncrstransport@gmail.co**

# பொருளடக்கம்

## வருடாந்த அறிக்கை – 2023
## (2023.01.01 முதல் 2023.12.31)


| விபரம் | பக்க இலக்கம் |
|---|---|
| அறிமுகம் | 04-**05** |
| வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் அங்கத்தவர் உள்ளடக்கம் | 06-07 |
| வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் பணியாட் குழுவினர் | 08 |
| வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் நோக்கம் | 09 |
| வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் | 10 |
| வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் செயற்பாடுகள் | 11-21 |
| வீதி விபத்துத் தரவுகள் | 22-23 |
| வீதிப் பாதுகாப்பு நிதியத்திற்குப் பங்களிப்பு வழங்குகின்ற பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் | 24 |
| இறுதிக் கணக்குகள் | 25-40 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 41-50 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் | 51-60 |

## வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை.

**அறிமுகம்**

1998 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்கம் கொண்ட மோட்டார் வாகன திருத்தச் சட்டத்தின் 213 (அ) மற்றும் 213(ஆ) என்ற பிரிவுகளின் கீழ் வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற ஒரு நிறுவனமாக தாபிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை போக்குவரத்து விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்படுகின்ற தவிசாளர் உள்ளிட்ட 16 அரச நிறுவனங்கள் மற்றும் ஓர் அரச சார்பற்ற தாபனமொன்றின் பிரதிநிதி ஒருவர் உள்ளிட்ட 17 பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு நிறுவனமாகும். வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையினை பிரதிநிதிப்படுத்துகின்ற இவ் அனைத்து நிறுவனங்களும் இந்நாட்டின் போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு விடயம் தொடர்பாகப் பொறுப்புகூற வேண்டிய அரச நிறுவனங்களாகும். வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் செயற்பாடுகள் குறித்து தேவைப்படுகின்ற வருமானங்கள் இலங்கைக்குள் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்ற காப்புறுதி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுவதோடு, 2004 நவம்பர் மாதம் 24 ஆம் திகதி 1368/18 ஆம் இலக்கம் கொண்ட அரச அதி விசேட வர்த்தமானியின் மூலம் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் நிதியம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ளவாறு, "மூன்றாம் தரப்பின் ஆபத்தொன்றுதொடர்பில் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு காப்புறுதி உறுதி அல்லது பிணையொன்று காப்புறுதி செய்யும் அனைத்து காப்புறுதி நிறுவனங்களாலும் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைக்கு தவணைக் கட்டணத் தொகையிலிருந்து நூற்றுக்கு ஒன்று (1%) பங்களிப்புத் தொகையாகச் செலுத்துதல் வேண்டும்". அதற்கமைய இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள் அனைத்து காப்புறுதிக் கம்பனிகளும் தமது நிறுவனங்களின் மூலம் காப்புறுதி செய்யப்படுகின்ற மூன்றாம் தரப்பு அனைத்து வாகனங்களுக்காக அறவிடப்படுகின்ற காப்புறுதி கட்டணத்திலிருந்து 1% பெறுமதியான தொகையை 2004 திசெம்பர் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை நிதியத்திற்கு வரவு வைத்தல் வேண்டுமென்பதோடு, போக்குவரத்து அமைச்சரினால் வெளியிடப்பட்ட 2021 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 2245/31 ஆம் இலக்கம் கொண்ட அரசங்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அக்குறித்த காப்புறுதிப் பங்களிப்புத் தொகை 2021 ஒக்தோபர் 01 ஆம் திகதி முதல் 2% வரை அதிகரித்துக் கொள்வவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப் பொறுப்புகள் தொடர்பாக 2005 ஏப்ரல் 04 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1387/04 ஆம் இலக்கம் கொண்ட அரச அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. வீதியில் விபத்துகளை ஏற்படுத்தி விட்டு

நிறுத்தாமல் தப்பியோடிய வாகனங்களை அடையாளம் காண முடியாத நிலையிலுள்ள வாகனங்கள் என உறுதிபடுத்தியதன் பின்னர் அக்குறித்த வாகனங்களால் விபத்துகளுக்கு பலியாகி உயிரிழந்த மற்றும் அங்கவீனமுற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நபர்கள் தொடர்பில் சபை மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள அடிப்படையில் நட்டஈடு தொகை வழங்குவது அதன் பொறுப்புக் கூறவேண்டிய பிரதான கடமைப் பொறுப்புகளில் ஒன்றாகும்.

வீதிப் பாதுகாப்பை உறுதி செய்தல், விபத்துக்களைக் குறைத்தல், பாதசாரிகள் மற்றும் பயணிகளின் உயிர்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளல், பொது மக்களை அறிவுறுத்தல், அதற்குத் தேவைப்படுகின்ற புதிய சட்டங்களை இயற்றுதல் அல்லது ஏற்கனவேயுள்ள சட்டங்களைத் திருத்தம் செய்வதற்காக விடயப் பொறுப்பு அமைச்சருக்கு ஆலோசனைகளை வழங்குதல் உள்ளிட்ட ஒட்டுமொத்த அடிப்படையில் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் நீக்குவதன் மூலம் வீதிப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக இந்த நிதியத்தில் வைப்புச் செய்யப்படுகின்ற நிதியைப் பயன்படுத்திக்கொள்ளவதற்கு முடியும்.

அதே போன்று வீதிப் பாதுகாப்புத் தொடர்பான அனைத்து நிர்வாக மற்றும் ஏனைய செலவுகளையும் இந்த நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்

### வீதி பாதுகாப்பு  தொடர்பான தேசிய சபை உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. திரு. மலித் ஜயதிலக்க - | தலைவர், வீதிப்  பாதுகாப்பு தொடர்பான  தேசிய சபை |
| 02. திருமதி. ஆர்.ஏ.கே. ரேணுகா - | செயலாளர், வீதிப்  பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை |
| 03. திருமதி. ரீ.சி. புஷ்பகுமாரி - | கணக்காளர், வீதிப்  பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை |
| 04. திருமதி. எஸ்.ஜி. சுபசிங்க - | கல்வி பணிப்பாளர் (இணை பாடத்திட்டம் மற்றும் வழிகாட்டல் ஆலோசனை சபை) கல்வி அமைச்சு |
| 05.திருமதி. ஜே.டி. வத்சலா மாரம்பகே - | சிரேட்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் பயிற்சி) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| 06 . திரு. ரீ.எம்.எஸ்.கே. தென்னகோன் - | உதவி ஆணையர் (தொழில்நுட்பம்) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் |
| 07. திரு.ஜே.ஐ.டி. ஜயசுந்தர - | பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு |
| 08. திரு. எச்.ஏ.கே.ஏ. இந்திக ஹப்புகொட - | பிரதி பொலிஸ் மா அதிபர் (போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்பு) இலங்கை பொலிஸ் திணைக்களம் |
| 09. திரு. ஜே.எம்.எஸ்.ஜே. பண்டார - | சிரேட்ட பேராசிரியர், மொரட்டுவ பல்கலைக்கழகம் |
| 10. திருமதி எஸ்.டி. அத்துகோரல - | பணிப்பாளர் (தரப் பாதுகாப்பு வெளி உறவுகள்) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு |
| 11. திரு. தம்மிகா ஆட்டிகல | தவிசாளர், இலங்கை ஓட்டோ மொபைல் சங்கம் |
| 12. திரு. கிஹான் ராமநாயக்க - | தவிசாளர், இலங்கை விபத்து தவிர்ப்புச் சங்கம் |
| 13. திருமதி. சி.பி.ஐ. டி சில்வா - | சிரேட்ட நிறைவேற்று அலுவலர், இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல்  ஆணைக்குழு |
| 14. திரு. ஜி.ஜி.எம். குலதிலக - | தலைமை நிறைவேற்று அலுவலர், இலங்கை போக்குவரத்து சபை |

| | |
|---|---|
| 15. திருமதி. கே.எஸ்.எம். சமரசேகர - | தலைமை மருத்துவ அலுவலர், தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் |
| 16. திருமதி. அனுராதா கல்லன்கொட - | பிரதிப் பணிப்பாளர் (நிறுவன விவகாரங்கள் பிரிவு) நிதி மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு |
| 17. திரு. டபிள்யூ.ஏ.எஸ். சுமனசூரிய - | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மனிதவள அபிவிருத்தி ) நகர அபிவிருத்தி அதிகார சபை |
| 18. திரு. டி.எம்.கே.எஸ். திசாநாயக்க - | பணிப்பாளர் (பொறியியல்), நெடுஞ்சாலைகள் அமைச்சு |
| 19. திரு. பி.ஏ. சந்திரபால - | பணிப்பாளர் பொறியியல் ( மோட்டார் வாகன நிர்மாண மற்றும் வீதிப் பாதுகாப்பு), கொழும்பு மாநகர சபை |
| 20. திரு.கே. சந்திரகுமார - | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (உட்கட்டமைப்பு வசதிகள், வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து முகாமைத்துவம்) வீதி அபிவிருத்தி அதிகார சபை |

**வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை**

| | | |
|---|---|---|
| 01. தவிசாளர் | - | 01 |
| 02. செயலாளர் | - | 01 |
| 03. கணக்காளர் | - | 01 |
| 04. அபிவிருத்தி அலுவலர்கள் | - | 10 |
| 05. முகாமைத்துவ சேவை அலுவலர் | - | 01 |
| 06. தொழில்நுட்ப உதவியாளர் | - | 01 |
| 07. சாரதி | - | 01 |

**வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் நோக்கங்கள்**

- ஒழுக்கமான மற்றும் சட்டத்தை மதிக்கின்ற சாரதிகள் உருவாக்குவதனூடாக உயர் தரம் வாய்ந்த சாரதி சேவையொன்றை உருவாக்குவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குதல்.
- மோதிவிட்டு தப்பிச்சென்றமை காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குதல் மற்றும் அத்தகைய விபத்துகளைக் குறைப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்.
- வீதி மற்றும் அதனைப் பயன்பபடுத்துகின்ற வாகனங்கள் மற்றும் போக்குவரத்துச் செய்கின்ற பயணிகள் உள்ளிட்ட பாதசாரிகளின் பாதுகாப்புக்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை அடையாளம் காணல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
- வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், ஆய்வுசெய்தல் ற்றும் ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் சர்வதேச ஒருங்கிணைப்பை விருத்தி செய்து கொள்ளல்.
- அரசு துறை, அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து தேசிய வீதிப் பாதுகாப்புக் கொள்கை நடைமுறைப்படுத்துதல் மற்றும் எழக்கூடிய பலவீனங்களைக் கட்டுப்படுத்துதல்
- வீதிப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் மற்றும் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் சமூக ரீதியாக நடைமுறைப்படுத்த முடியுமான செயல்பாடுகள் மற்றும் சூழல் நற்புறவான பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றுவதற்காக நிதியுதவி மற்றும் ஆலோசனைகளை வழங்கல்.
- தேசிய போக்குவரத்துக் கொள்கையைத் தயாரிப்பது மற்றும் அதன் செயற்பாட்டுக்குப் பங்களிப்பு வழங்குதல்.
- வீதிப் பாதுகாப்புத் தொடர்பான சட்டங்களைத் தயாரித்தல் மற்றும் திருத்தம் செய்தல் போன்ற செயற்பாடுகளுக்கு தேவையான பங்களிப்புகளை வழங்குதல்.

**வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் பணிகள் மற்றும் அதிகாரங்கள்**

வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் பணிப்பொறுப்புக்கள மற்றும் பணிகளை மேற்கொள்ள வேண்டிய முறைகள் தொடர்பாக, 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1387/4 ஆம் இலக்கம் கொண்ட அரச அதி விசேட வர்த்தமானியின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த வர்த்தமானியின் மூலம் கட்டளையிடப்பட்டுள்ளவாறு வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிப்பொறுப்புகள் கீழே தரப்பட்டுள்ளவாறாகும்.

(அ) கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கணனித் தரவுக் களஞ்சியமென்றை / சேமிப்பகம் ஒன்றைப் பராமரித்தல்

i. வாகனங்களின் அளவு மற்றும் அவற்றின் இயல்புகள் மற்றும் உள்ளடக்கம்

ii. வீதி விபத்துக்கள்.

iii. வீதிப் பாதுகாப்பு தொடர்பான உள்நாட்டு மற்றும் சர்வதேச புள்ளி விபரங்கள்

(ஆ) வீதிப் பாதுகாப்பு விடயம் தொடர்பான நூலகம் ஒன்றைப் பேணி வருத்ல.

(இ) தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக தகவல்களைச் சேகரித்தல், ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் வெளிக்களப் பரிசோதனைகளை நடாத்துதல்.

(ஈ) தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளுக்கு உதவுதல்.

(உ) சமமான சர்வதேச நிறுவனங்களுடன் உறவுகளைப் பேணுதல் மற்றும் அனுபவம் தொடர்பான அறிவினை பரிமாற்றிக் கொள்ளல்.

(ஊ) வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய விடயம் சார் கருத்திட்டங்கள் தொடர்பில் பொறுப்பு வகிக்கின்ற அரச மற்றும் அரச சார்பற்ற குறித்த நிறுவனங்களுக்கு அறிவு மற்றும் தகவல்களை வழங்குதல்.

(எ) வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய கருத்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல்.

(ஏ) அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினுள் வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய பணிகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.

(ஐ) இனம் காணப்படாத வாகனங்கள் மூலம் விபத்துகளுக்கு ஆளாகிய ஆட்களுக்கு நஷ்டஈடு வழங்குதல்

(ஒ) வீதி பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளுக்காக நிதிசார் மற்றும் வேறு உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்

(ஓ) வீதி பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக அரசுக்கு மதியுரைகளை வழங்குதல்.

## 2023 ஆம் ஆண்டில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் செயற்பாடுகள்.

### 01. வீதிப் பாதுகாப்பிற்காகப் பணியாற்றிய நபர்களைப் பாராட்டுதல்.

2023 ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி மாலை, கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் செல்லும் புகையிரதம் பயணம் செய்த பாதையில் ஹப்புத்தளை கிளெனோர் தோட்டத்தின் புகையிரதக் கடவைக்கு அருகில், பெரிய மரமொன்று விழுந்து பாதை தடைப்பட்டுக் காணப்பட்டது. அங்கு ஏற்படவிருந்த பாரிய உயிர் மற்றும் சொத்து இழப்பைத் தடுப்பதற்காக துரிதமாகச் செய்றபட்டு புகையிரதம் செல்லும் பாதைக்கு வந்து புகையிரத்திற்கு ஆபத்து தொடர்பாக சமிக்ஞை செய்து புகையிரதத்தை நிறுத்துவதற்கு செயற்பட்ட தங்கமலே தோட்டத்தின் காவலாளியான ஹப்புத்தளையைச் சேர்ந்த திரு.எச்.எம். விஜயரத்ன அவர்கள் தனது உயிரைப் பணயம் வைத்து அவர் செய்த வீரச் செயலுக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் விசேட நிகழ்வொன்று ஹப்புத்தளை புகையிரத நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

திரு. விஜயரத்ன அவர்கள் செய்த வீரச் செயலைப் பாராட்டி, அவரது சேவைக்காக ஒரு இலட்சம் ரூபா வெகுமதியை வழங்குவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.



**02. போதைப் பொருகளை உபயோகப்படுத்திக் கொண்டு வாகனம் செலுத்தும் சாரதிகளை அடையாளம் காணும் முன்னோடிக் கருத்திட்டத்தைமேற்கொள்ளல்.**

போதைப் பொருட்களைப் பாவித்துக்கொண்டும் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை கண்டறிவதற்காக, வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை மூலம் அபாயகரமான ஔதடங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபைக்கு வழங்கப்பட்டிருந்த 10 மில்லியன் ரூபாத் தொகை மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பரிசோதனைக் கருவிகளைப் பயன்படுத்தி இலங்கைப் பொலிஸாருடன் இணைந்து முன்னோடிக் கருத்திட்டம் மேல் மற்றும் தென் மாகாணங்களில் செயற்படுத்தப்பட்டது






**03. வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை மற்றும் கொழும்பு மாநகர சபையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட பாடசாலை வீதிப் பாதுகாப்பு கல்வி அலகிற்கு 20 மிதிவண்டிகளை வழங்குதல்**

2023.05.17 ஆம் திகதி வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை நிதியிலிருந்து 20 மிதி வண்டிகளை வழங்குதல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது.



## 04. ஹர கடவத்தை வெசாக் வலயம் மற்றும் ஹோமாகம பொசோன் வலயத்தை நடாத்துதல்.

அரச அனுசரணையில் நடாத்தப்பட்ட வெசாக் வலயம் மற்றும் பொசோன் வலயத்துடன் இணைந்ததாக, வீதிப் பாதுகாப்புத் தொடர்பான விரிதுப் பாடல்கள், காணொளிகள் ஊடாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை மூலம்மேற்கொள்ளப்பட்டது.











**05. 2023.08.12 மற்றும் 13 ஆம் திகதிகளில் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தினால் குருநாகல் சேர் ஜோன் கொத்தலாவல மத்திய கல்லூரியில் நடாத்தப்பட்ட இரண்டு நாள் நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்தாக, வீதிப் பாதுகாப்பு மற்றும் வீதி விபத்துகளைக் குறைத்தல் குறித்த நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.**

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்,பொது மக்களை அறிவுறுத்துவதற்காக போக்குவரத்து தலைமையகத்தின் வீதி நாடகக் குழுவைப் பயன்படுத்தி நாடகம் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன, துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன, காணொளிகள் (வீடியோ காட்சிகள்) காட்சிப்படுத்தப்பட்டன மற்றும் வீதி விபத்து தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பொதுமக்களுடன் கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டன.




**06. 2023.09.27 ஆம் திகதி வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் மற்றும் வீதிப் பாதுகாப்பை உறுதி செய்வதில் ஊடக நிறுவனங்களின் பணிப்பொறுப்புக்கள் தொடர்பாகவும், பின்வரும் கருப்பொருள்களின் அடிப்படையில், ஒலி/ ஒளி ஊடகங்களில் பணிபுரியும் ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.**

- வேகமாக அதிகரித்து வரும் வீதி விபத்துகள்
- பாதுகாப்பான வீதி அமைப்பிற்கான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பொறுப்புக்கள்
- போக்குவரத்துச் சட்டத்தில் சமீபத்திய திருத்தங்கள் மற்றும் எதிர்கால சட்ட நடவடிக்கைகள்
- விபத்துக்குப் பின்னரான முகாமைத்துவம்
- வீதி விபத்து தடுப்பு மற்றும் தரவு பகுப்பாய்வு
- வீதிப் பாதுகாப்பு பற்றியதேசிய சபை மூலம் மேற்கொள்ளப்படவுள்ள எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள்





07. கம்பஹா, ஊராபொல மத்திய கல்லூரியில் 2023 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.

ஊராபொல மத்திய கல்லூரியில் கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியுடன் இணைந்த்தாக வீதிப் பாதுகாப்புப் பற்றிய சபை மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.





08. வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் நிறுவனக் கட்டமைப்பைத் தயாரித்தல், புதிய வேக எல்லைகள், வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக்கான தரவு அமைப்பை நிறுவுதல் மற்றும் வீதிப் பாதுகாப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் ஆகிய முக்கிய விடயஙடகளின் கீழ் உலக வங்கிப் பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது.





**09. கேட்டல்/கேள்விக் குறைபாடுள்ள நபர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக வீதிப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.**

2023.09.25 ஆம் திகதி குருநாகல் மாவட்டத்தில் நடைபெற்ற முழுமையானகேட்டல்/ கேள்விக் குறைபாடுள்ள நபர்களுக்கு இலகு ரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்சித்திட்டம் தொடர்பாக, கேள்விக் குறைபாடுள்ள நபர்களின் வாகனங்களில் ஒட்டுவதற்காக் கேள்விக் குறைபாடு உள்ளவர்களைக் குறிக்கும் சமிக்ஞையுடன் கூடிய ஸ்டிக்கர்கள் அச்சிடப்பட்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.



10. **உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் விஹாரமஹா தேவி பூங்காவில் தாபிக்கப்பட்ட வீதிப் பாதுகாப்புப் பிரிவில் நடைபெற்றது.**

2023 ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வில், நிக்கஹெட்டிக்கந்த கனிட்ட கல்லூரி, யட்டவர கனிட்ட கல்லூரி, போபாக கனிட்ட கல்லூரி மற்றும் ரதம்பலே கனிட்ட கல்லூரி ஆகிய பாடசாலைகளில் தரம் 1 மற்றும் தரம் 2 இல் கல்வி பயிலும் 100 மாணவர்கள், பல ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.








11. வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை மற்றும் கல்வி அமைச்சின் இணைப் பாடத் திட்டப் பிரிவுடன் இணைந்து தேசிய மற்றும் மாகாண பாடசாலை அமைப்புகளில் செயல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வீதிப் பாதுகாப்பு சங்கத்தை (Road Safety Club) நிறுவுதல் மற்றும் அதன் உறுப்பினர்களான பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் பாதுகாப்பு தொடர்பான புள்ளிகள் வழங்குதல் மற்றும் பதக்கங்களை வழங்குவதற்கான திட்டத்தைத் தயாரிப்பதற்கு (இறுதியில் சனாதிபதி பதக்கம் வரை செல்வதற்கு ஏற்றவாறு) சுற்றறிக்கையைத் தயாரித்தல் மற்றும் வழிகாட்டுதல் கோப்பைத் தயாரிப்பதற்கான பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல்.

12. வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் அமுல்லாக்கல் திட்டத்தின் செயற்பாடு 17 இன் கீழ் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள “பாடசாலை மாணவர்களிடையே வீதிப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு கல்வி அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுத்தல்” என்பதன் கீழ், செயற்படுத்தப்படவுள்ள , 6 - 11 வகுப்புகளுக்கான விஞ்ஞான மற்றும் கணித பாடத்திட்டத்தில், ஆசிரியர் கைநூலில் மற்றும் பாடப் புத்தகத்தில் வீதி விபத்துகளுக்கு அடிப்படையான கோட்பாட்டு ரீதியான அறிவை உட்சேர்ப்பதற்காக விசேட அறிவு கொண்ட அதிகாரிகளை உள்ளடக்கியதாக ஒரு பட்டறை 2023.10.10 மற்றும் 11 ஆகிய இரு தினங்களில் பத்தரமுல்லை நிர்மாண இயந்திர உபகரணங்கள் பயிற்சி நிலையத்தில் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.




**13. 2023.10.21 ஆம் திகதி மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மூலம் மட்டக்களப்பு இந்து கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது.**

வீதிப் பாதுகாப்பு மற்றும் வீதி விபத்துகளைக் குறைத்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், வீடியோக் காட்சிகளைக் காண்பித்தல் மற்றும் துவிச்சக்கர வண்டி/ மிதி வண்டி விபத்துகளைக் குறைப்பதற்கான பிரதிபிம்ப ஸ்டிக்கர்களை ஒட்டுதல் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.




14. சிறு வயதிலிருந்தே வீதிகள் மற்றும் வீதி விபத்துகள் குறித்த எளிய விழிப்புணர்வையும் புரிந்துணர்வையும் வழங்கும் நோக்கில் பாலர் பாடசாலைகளில் செயற்படுத்தப்படவுள்ள "சிங்கித்தி மக சர" நிகழ்ச்சித் திட்டத்திற்காக, வீதி விபத்துக்கள் தொடர்பான விளையாட்டு (Road Safety Ladder board) வழங்குவதற்கான சாத்தியப்பாட்டு ஆய்வொன்று கம்பஹா மாவட்டத்தில் உள்ள இந்திகஹமுல்லவில் உள்ள சிறிசித்துஹத் பாலர் பாடசாலை மற்றும் வெலிவேரியவில் உள்ள கிரேட் ராயல் (Grate Royal) பாலர் பள்ளி மாணவர்களைப் பயன்படுத்தி நடாத்தப்பட்டது.





15. 2023.11.30 ஆம் திகதி வீதி விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நினைவு தினத்தை முன்னிட்டு, வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையால் செயல்படுத்தப்படுகின்ற நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், வீதி விபத்துக்களால் நிரந்தரமாக அங்கவீனமுற்ற 25 பேருக்கு தலா ரூபா.150,000.00 வீதம் நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.







**16. 2023.12. 27, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் பஸ்யால மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட கல்வி கண்காட்சியுடன் இணைந்ததாக வீதிப் பாதுகாப்புத் தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துதல்.**

இந்த கண்காட்சியில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்கள், பொதுமக்களுக்கு வீதிப் பாதுகாப்புத் தொடர்பான காணொளிகள், சுவரொட்டிகள் காட்சிப்படுத்தல் மற்றும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல் மூலம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.




## 17. மோட்டார் வாகன (வேக எல்லை) கட்டளை விதித்தல் முன்னோடி திட்டம்

மோட்டார் வாகன வேக எல்லை கட்டளை விதித்தல் முன்னோடி திட்டத்திற்கு உரியதாக மேல் மாகாணம் தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்வரும் பாதைகளில் அடையாளம் காணப்பட்ட உணர்திறன் வலயங்களுக்காக வேக எல்லைகளைக் குறிப்பதற்கு / அடையாளமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1. திவுலப்பிட்டி - இந்துராராகர மாவத்தை
2. வத்தளை - மஹர வீதி
3. கிரிந்திவெல - வத்துரகம வீதி
4. ஊராபொல - ருவன்வெல்ல வீதி
5. உஸ்வெட்டகெய்யாவ - எப்பாமுல்ல வீதி










**18. மேதிவிட்டு தப்பிச் சென்ற வீதி விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி வழங்குதல்**

நிலையியற் குழு மற்றும் தேசிய சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற பாதிக்கப்பட்டவர்களுக்கு, 2023 ஆம் ஆண்டில் நான்கு முறை நிதி உதவி வழங்கப்பட்டது.

| **திகதி** | **இடம்** | **பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை** | **செலுத்தப்பட்ட நட்டஈடு ரூபா. இலட்சம்** |
|---|---|---|---|
| 2023.03.29 | மருதானை போக்குவரத்து இராஜாங்க அமைச்சு அமையப் பெற்றுள் வீதிப் பாதுகாப்பு பற்றிய தேசிய சபை அலுவலகம் | 20 | 3,500,000.00 |
| 2023.07.13 | மருதானை போக்குவரத்து இராஜாங்க அமைச்சு அமையப் பெற்றுள் வீதிப் பாதுகாப்பு பற்றிய தேசிய சபை அலுவலகம் | 09 | 1,850,000.00 |
| 2023.09.01 | மருதானை போக்குவரத்து இராஜாங்க அமைச்சு அமையப் பெற்றுள் வீதிப் பாதுகாப்பு பற்றிய தேசிய சபை அலுவலகம் | 08 | 1,400,000.00 |
| 2023.11.21 | மருதானை போக்குவரத்து இராஜாங்க அமைச்சு அமையப் பெற்றுள் வீதிப் பாதுகாப்பு பற்றிய தேசிய சபை அலுவலகம் | 03 | 550,000.00 |
| **மொத்தம்** | | 40 | 7,300,000.00 |

18. **2023 ஆம் ஆண்டில் நாட்டில் இடம்பெற்ற வாகன விபத்துக்களின் எண்ணிக்கை.**

| வருடம் | கொடிய | பாரதூரமான | சிறிய | நட்டம் | மொத்தம் | உயிரிழந்தோர் |
|---|---|---|---|---|---|---|
| 2023 | 2,171 | 5,561 | 9,169 | 5,903 | 22,804 | 2,280 |

**2023 வருடத்தில் உயிரிழந்த எண்ணிக்கை**

| வகை | 2023 |
|---|---|
| மோட்டார் சைக்கிள் சாரதிகள் | 742 |
| பின்னிருகையாளர்கள் | 179 |
| பாதசாரிகள் | 696 |
| பயணிகள் | 277 |
| சாரதிகள் | 176 |
| சைக்கிள் சாரதி கள் | 206 |
| மற்றவை | 45 |
| மொத்த | 2321 |

| **2023 ஆண்டினுள் ஏற்பட்ட கொடிய விபத்துக்களுக்கு பொறுப்புக் கூறவேண்டிய வாகனங்கள்** | |
|---|---|
| பொறுப்பான வாகனம் | 2023 |
| | **கொடிய விபத்துக்கள்** |
| மோட்டார் சைக்கிள் | 899 |
| லொரி | 247 |
| முச்சக்கர வண்டி | 258 |
| ஜீப் | 21 |
| கார் | 173 |
| தனியார் பஸ் வண்டி | 186 |
| இபோச பஸ் வண்டி | 82 |
| டிராக்டர் | 28 |
| துவிச்சக்கர வண்டி | 39 |
| கன்டெய்னர்/கொள்கலன் வண்டிகள் | 11 |
| வேன் | 106 |
| கெப் | 97 |
| பவுசர் | 05 |
| புகையிரதம் | 03 |
| பெக்கோ இயந்திரம் | 02 |
| மோதிவிட்டு தப்பிச் செல்லல் | 56 |
| ஏனையவை | 12 |
| மொத்தம் | **2225** |

**வீதிப் பாதுகாப்பு நிதியத்துக்குப் பங்களிப்பு வழங்கும் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்கள்**:

| | | |
|---|---|---|
| 01 | அமானா தகாபுல் காப்புறுதி நிறுவனம் | - இலக்கம். 660, 1/1, காலி வீதி, கொழும்பு – 03. |
| 02 | அலியன்ஸ் காப்புறுதி நிறுவனம் | - இலக்கம். 675, டெனிஸ்டர் டி சில்வா ாவத்தை, கொழும்பு |
| 03 | செலின்கோ காப்புறுதி நிறுவனம் - | 3வது மாடி, “செலின்கோ இல்லம்”, இலக்கம். 69, சனாதிபதி மாவத்தை, கொழும்பு – 01. |
| 04 | கொண்டினென்டல் காப்புறுதி நிறுவனம் | - இலக்கம். 79, சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர ாவத்தை, கொழும்பு – 07 |
| 05 | வ/ப. கூட்டுறவு காப்புறுதி நிறுவனம் | - இலக்கம். 74/05, கிரான்ட் பாஸ் வீதி, கொழும்பு – 14. |
| 06 | எச்.என்.பி காப்புறுதி நிறுவனம் | - வர்த்தக நிலையம், இலக்கம். 30, ஸ்ரீ உத்தரானந்த மாவத்தை, கொழும்பு – 03 |
| 07 | எல்.ஓ.எல்.சி. காப்புறுதி நிறுவனம் . | - இலக்கம். 481, டி.பி. ஜாய மாவத்தை, கொழும்பு – 10 |
| 08 | தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம் | - இலக்கம். 95, UPTO ஹவுஸ், சேர் சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 02 |
| 09 | எம்.பி.எஸ்.எல். காப்புறுதி நிறுவனம் | - இலக்கம். 519, டி.பி. ஜாய மாவத்தை, கொழும்பு – 10. |
| 10 | ஓரியண்ட் காப்புறுதி நிறுவனம் | - இலக்கம். 133, புதிய புலர்ஸ் வீதி, கொழும்பு – 04. |
| 11 | பீபள்ஸ் காப்புறுதி நிறுவனம் | - இலக்கம். 07, ஹெவ்லொக் வீதி, கொழும்பு – 05. |
| 12 | வ/ப சணச காப்புறுதி நிறுவனம் | - இலக்கம். 172, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு |
| 13 | இலங்கை காப்புறுதி நிறுவனம் | - காப்புறுதி மந்திரய, இலக்கம். 21, வொக்ஸ்ஷால் வீதி, கொழும்பு – 02. |
| 14 | பெயா பெஸ்ட் காப்புறுதி நிறுவனம் | - இலக்கம். 33, சாந்த மைக்கல் வீதி, கொழும்பு – 03. |

# 2023 வருடாந்த கணக்குகள

**வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை**
**2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த**
**ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று**

| | | | |
|---|---|---|---|
| | | **2023** | **2022** |
| | | | (மீளக் குறிப்பிடப்பட்ட ) |
| | குறிப்பு | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | | |
| காப்புறுதி கம்பனிகளிடமிருந்து கிடைத்த பங்களிப்பு | 3 | 74,206,951.08 | 72,177,175.66 |
| ஏனைய வருமானங்கள் | 4 | 95,754,490.18 | 59,623,928.59 |
| **மொத்த வருமானம்** | | **169,961,441.26** | **131,801,104.25** |
| **கழி - செலவினம்** | | | |
| நிர்வாகச் செலவினங்கள் | 5.1 | 9,183,210.68 | 11,736,669.91 |
| வீதிப் பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | 5.2 | 28,079,309.68 | 55,131,649.20 |
| **செலவினத்தையும் பார்க்க வருமானத்தின் மிகை** | | **132,698,920.90** | **64,932,785.14** |

## தேசிய வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2023<br>ரூபா | 2022<br>(Restated)<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் | 6 | 4,385,243.44 | 3,073,807.79 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | **4,385,243.44** | **3,073,807.79** |
| திறைசேரி உண்டியல்கள் | 7 | 391,124,079.56 | 321,543,535.44 |
| நிலையான சொத்துக்கள் | 8 | 248,116,174.31 | 186,550,001.20 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| காப்புறுதி கம்பெனிகளிடமிருந்து கிடைக்கவேண்டியவைகள் | 3 | 6,947,130.98 | 6,038,024.51 |
| கி.வே.திறைசேரி உண்டியல்களின் வட்டி | 7 | 5,301,939.75 | 7,679,994.18 |
| கி.வே நிலையான வைப்புக்களின் வட்டி | 8 | 10,283,869.50 | 7,885,735.26 |
| முன் கொடுப்பனவுகள் | | - | 26,783.09 |
| வங்கியில் உள்ள காசு | 9 | 40,627,139.22 | 47,858,688.01 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | **706,785,576.76** | **69,489,225.05** |
| **கழிப்பனவுகள் நடைமுறை பொறுப்புகள்** | | | |
| செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணம் | | 260,820.00 | 200,000.00 |
| வழங்குநர்களுக்கு செ.வேண்டியது | | - | 6,586,736.23 |
| முத்திரை வரி | | 200.00 | 625.00 |
| செ.வேண்டிய கொடுப்பனவுகள் | | 83,349.06 | 126,921.45 |
| | | 344,369.06 | 6,914,282.68 |
| **மொத்தச்சொத்துக்கள்** | | **706,441,207.70** | **573,742,286.80** |
| **வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் நிதிக் கணக்கு** | | | |
| நிதியியல் கணக்கு நிலுவை மு.கொ | | 573,742,286.80 | 508,809,501.66 |
| செலவினத்திலும் பார்க்க வருமானத்தின் மிகை | | 132,698,920.90 | 64,932,785.14 |
| **மொத்த நிதியீடு** | | **706,441,207.70** | **573,742,286.80** |

சிறப்பு கணக்கியல் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 5 முதல் 14 வரை உள்ள குறிப்புகள் இந்த நிதிநிலை கூற்றுகளைச் சேர்ந்தவை

**சான்றுப்படுத்தல்**

மேற்குறிப்பிட்ட நிதிக் கூற்றுகள் மூலம் 2023 திசெம்பர் 31 திகதி வரையிலான நடவடிக்கைகள் தொடர்பாக உண்மையானதும் ந கருத்துரை சமர்ப்பிக்கப்படுகின்றதென்பது குறித்து மற்றும் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்க மிகை/(பற்றாக்குறை குறித்து உறுதிப்படுத்துகின்றோம். இந்த நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் இந்தச் சபை பொறுப்பாகும். இந்த நிதிக் கூற்றுகள் சபையால் அங்கீகரித்து கையொப்பமிடப்பட்டுள்ளது.

கணக்காளர் (க.நி)
வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை

செயலாளர்
வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை

## வீ+A1:G53திப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நேரில் முறைக் காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2023 | 2022 (Restated) |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான நிதிப் பாய்ச்சல்** | ரூபா | ரூபா |
| வரிக்கு முன்னரான இலாபம் | 132,698,920.90 | 69,109,561.46 |
| <u>சீராக்கங்கள்</u> | | |
| ஆரம்ப வருடத்தின் சீராக்கங்களுக்கான (தேறிய) | 1,155,044.23 | (1,175.00) |
| தேய்மானம் | 1,247,764.35 | 810,629.91 |
| நிலையான வைப்புக்கள் வழங்கல் | - | 3,803,686.15 |
| வட்டி வருமானம் | (95,754,490.18) | (58,390,437.91) |
| **செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்படு இலாபம்** | 39,347,239.31 | 15,332,264.61 |
| **செயற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| ஏனைய கிடைக்க வேண்டிய வைகளின் குறைவுகள்/ (அதிகரிப்புக்கள்) | (902,403.19) | (9,061,759.66) |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய வைகளின் குறைவுகள்/ | (6,569,913.62) | 116,127.54 |
| **செயற்பாடுகள் மூலம் உழைக்கின்ற தொகை** | (7,472,316.81) | (8,945,632.12) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய தொகை | 31,874,922.50 | 6,386,632.49 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | (3,714,244.23) | (1,224,331.94) |
| வட்டி கிடைப்பனவுகள் | 95,754,490.17 | 58,390,437.91 |
| நிலையான வைப்புக்களின் மீள் முதலீடு | (61,566,173.11) | (7,643,217.33) |
| திறைசேரி உண்டியல்கள் மீள் முதலீடு செய்தல் | (69,580,544.12) | (39,162,413.04) |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திய தேறிய தொகை** | (39,106,471.29) | 10,360,475.60 |
| **நிதிசார் நடவடிக்கைகளின் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| பங்கு மூலதனம் வெளியிடுவதன் மூலம் பெறும் நிதி | - | - |
| நீண்டகால கடன் பெற்றுக்கொள்வதன் மூலம் பெறும் நிதி | - | - |
| நிதிசார் குத்தகைப்பொறுப்புக்களின் கொடுப்பனவுகள் | - | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | - | - |
| நிதிசார் செயற்பாடுகளின்போது பயன்படுத்திய தேறிய தொகை | - | - |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் தேறிய அதிகரிப்பு** | **(7,231,548.79)** | **16,747,108.09** |
| **காலப்பகுதி ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | **47,858,688.01** | **31,111,579.92** |
| **காலப்பகுதி இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | **40,627,139.22** | **47,858,688.01** |

**வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை**
**2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான**
**உரிமையாண்மை மாற்றக் கணக்கு**

| | நிதியக் க/கு<br>ரூபா | மொத்தம்<br>ரூபா |
|---|---|---|
| **2017/01/01 ஆம் திகதியில் மீதி** | 260,040,799.57 | 260,040,799.57 |
| | | - |
| செலவினங்களிலும் பார்க்க வருமான மிகை | 40,561,344.97 | 40,561,344.97 |
| 2017/12/31 ஆம் திகதியில் மீதி | 300,602,144.54 | 300,602,144.54 |
| செலவினங்களிலும் பார்க்க வருமானமிகை (மீள மதிப்பீடு) | 59,487,763.56 | 59,487,763.56 |
| **2018/12/31 ஆம் திகதியில் மீதி** | 360,125,892.14 | 360,125,892.14 |
| செலவினங்களிலும் பார்க்க வருமானமிகை (மீள மதிப்பீடு) | 61,315,294.39 | 61,315,294.39 |
| 2019/12/31 ஆம் திகதியில் நிலுவை (மீண்டும் எடுத்துரைக்கப்ப | 421,441,186.53 | 421,441,186.53 |
| செலவினங்களிலும் பார்க்க வருமான மிகை (மீள மதிப்பீடு) | 61,862,692.11 | 61,862,692.11 |
| **2020/12/31 ஆம் திகதியில் மீதி** | 483,303,878.64 | 483,303,878.64 |
| செலவினங்களிலும் பார்க்க வருமான மிகை | 25,505,623.02 | 25,505,623.02 |
| **2021/12/31 ஆம் திகதியில் மீதி** | 508,809,501.66 | 508,809,501.66 |
| செலவினங்களிலும் பார்க்க வருமான மிகை | 64,932,785.14 | 64,932,785.14 |
| **31/12/2022ஆம் திகதியில் மீதி (மீளக் குறிப்பிடப்பட்ட)** | 573,742,286.80 | 573,742,286.80 |
| செலவினங்களிலும் பார்க்க வருமான மிகை | 132,698,920.90 | 132,698,920.90 |
| **2023/12/31ஆம் திகதியில் மீதி (மீளக் குறிப்பிடப்பட்ட)** | 706,441,207.70 | 706,441,207.70 |

**வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள்.**

## 1 தாபனத் தகவல்கள்.

### 1.1 பொதுத் தகவல்கள்.

வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை 1998 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனங்கள் (திருத்தம்) சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட, அமைச்சின் கீழுள்ள நியதிச்சட்ட நிறுவனம் ஒன்றாகும். இதன் பணிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் 213 (அ) என்ற மேலதிகப் பிரிவின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 01, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற இடத்தில் அமையப்பெற்றுள்ள அமைச்சின் கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

## 2 சிறப்புக் கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்.

### 2.1 பொதுக் கணக்கியல் கொள்கைகள்.

#### 2.1.1 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பின் அடிப்படை.

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபா என்ற நிதி அலகினால் சமர்பிக்கப்பட்டிருப்பதோடு அவை இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்கத் துறையின் கணக்குகள் தர நிலைகளுக்கு இணங்கியதாக வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

#### 2.1.2 இணக்கப்பாட்டு கூற்று

“2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மற்றும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றுகை, உரிமையான்மை மாற்றம் மற்றும் காசுப் பாய்ச்சல் மற்றும் கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இலங்கை அரசாங்க துறை கணக்கியல் தர நிலைகளுக்கு இணங்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படை

#### 2.2.1 சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்,

(அ) சொத்துக்கள் ,பொறிகள் மற்றும் உபகரணங்கள் திரண்ட தேய்மானத்தில் குறைக்கப்பட்டு அவற்றின் கிரயத்திற்கு அமைய கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் சொத்துக்களின் மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதோடு, அந்தத் திகதியில் காணப்பட்ட சொத்துகளில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் இருந்து திரண்ட தேய்மானம் கழிக்கப்பட்ட பின்னர் முகப் பெறுமதிக்கமைய கணக்குகளில் பதியப்பட்டுள்ளன.

#### ஆ) பெறுமானத் தேய்வு

பெறுமானத் தேய்மானத்திற்கான ஒதுக்கீடு நேர் கோட்டு முறையின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது, சொத்தைப் பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியுமான திகதியிலிருந்து அதன் பயனுறுதி வாய்ந்த முழு ஆயுட்கலத்திற்காகவும் இந்தக் கொள்கை பிரயோகிக்கப்பட்டுள்ளது. பயன்படுத்தப்பட்ட பிரதானமான வருடாந்தக் விகிதங்கள் பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| 1. கணனிகள் | 25% |
| 2. நிழற்படப் பிரதி / அச்சிடல் பொறிகள் | 12.5% |
| 3. குளிரூட்டிகள் | 12.5% |
| 4. இயந்திரங்கள் மறறும் ஏனைய சொத்துக்கள் | 12.5% |
| 5. தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 10% |
| 6. சாரதிகள் கற்றல் இயந்திரங்கள் | 10% |
| 7. கெமரா உபகரணங்கள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் | 25% |
| 8. வேறு ஊடக உபகணங்கள் | 12.5% |

சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேய்மான விகிதங்கள்

## 2.3 . முதலீடுகள்.

வீதிப் பாதுகாப்பு நிதியத்துக்கு பங்களிப்புத் தொகை மாதாந்த அடிப்படையில் காப்புறுதி நிறுவனங்களிலிருந்து கிடைக்கப் பெறுவதோடு, மேலதிக நிதி திறைசேரி உண்டியல்கள் மற்றும் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றில் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்படுகின்றன.

### (அ) நடப்பு /தற்போதைய முதலீடுகள்

தற்போதைய முதலீட்டுக் கிரயத்தின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு திறைசேரி உண்டியல்களிலிருந்து கிடைக்கின்ற வட்டி வருமானம் கால முதிர்ச்சியின் பின்னர் மீண்டும் முதலீடு செய்யப்படுகிறது.

## 2.4 பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள், நிதி நிலைமைக் கூற்று வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியுள்ள கடப்பாடுகளாகும்

### <u>2.4. 1 செலுத்த வேண்டியுள்ள ஏனைய கொடுப்பனவுகள்</u>

கடன்கொடுத்தோர்கள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் அவர்ளின் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏட்டுப் பெறுமதிகளில் காட்டப்பட்டுள்ளன.

### 2.4.2 ஏற்பாடுகள்/ஒதுக்கீடுகள்

கடந்த கால நிகழ்வின் விளைவாக சபைக்கு தற்போதைய பொறுப்பொன்று இருக்கின்ற போது, அந்தப் பொறுப்புக்களைச் செலுத்தி தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகள் உள்ளடக்கப்பட்ட வளங்களின் வெளிப் பாய்ச்சல் அவசியமாகும் என்பதோடு, கடப்பாடுகளின் அளவுகள் தொடர்பாக நம்பகத்தன்மை வாய்ந்த மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது ஏற்பாடுகள்/ ஒதுக்கீடுகள் இனங்கண்டு கொள்ளப்படும்.

## 2.5 வீதி பாதுகாப்பு நிதியத்தின் வருமானம்.

பதிவு செய்யப்பட்ட பதினாங்கு வாகனக் காப்புறுதி நிறுவனங்கள் அனைத்தும் மூன்றாம் தரப்புக் காப்புறுதி உறுதிப்பத்திர தவணைக் கட்டணகளிலிருந்து 1% செலுத்துவதோடு, 2021 ஒக்தோபர் 01 தொடக்கம் இது 2% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. காப்புறுதி நிறுவனங்கள் அவர்கள் செலுத்த வேண்டிய மாதாந்தப் பங்களிப்புத் தொகைகளை அடுத்த மாதத்தின் 15 ஆம் தித்திக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

## 2.6 பணியாட் குழு

தேசிய வீதிப் பாதுகாப்புச் செயலகம் என்பது வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையினால் செயற்படுத்தப்படும் ஒரு பிரிவாகும். ஏனைய துணைப் பணியாட் குழுவினர் போக்குவரத்து அமைச்சிலிருந்து வீதிப் பாதுகாப்பு செயலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர். பணியாட் குழுவினரின் சம்பளம் போக்குவரத்து அமைச்சினால் செலுத்தப்படுகின்றது.

## 2.7 <u>வழுக்கல்</u>

பிழைகள் கண்டறியப்பட்ட பின்னர், வெளியிடுவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள சபையின் முதலாவது நிதிநிலை அறிக்கைகளின் மூலம்,

(அ) பிழைகள் ஏற்பட்டுள்ள, முன்னைய காலப்பகுதிக்கான ஒப்பீட்டு தொகை அளவுகளை மீள எடுத்துரைத்தல். அல்லது

(ஆ) முன்வைக்கப்பட்ட முன்னைய காலப்பகுதிக்கு முன்னர் பிழைகள் ஏற்பட்டிருப்பின், முன்வைக்கப்பட்ட ஆரம்ப முன்னைய காலப்பகுதிக்காக உரிய சொத்துகள், பொறுப்புகள் மற்றும் நிகர சொத்துகள் / உரிமைகளின் தொடக்க/ ஆரம்ப நிலுவைகளை மீள எடுத்துரைத்தல்.

இதன் மூலம் முன்னைய காலப்பகுத்திற்கான வழுக்ளைக் கடந்த காலத்திற்கு ஏற்றவாறு சரி செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த வருடத்துக்குள் முன்னைய நிதிக்கூற்றில் சிற் சில வழுக்கல் கண்டறியப்பட்டதோடு அவை 2022 நிதிக் கூற்றுக்களில் மீண்டும் எடுத்துரைக்கப்பட்டதன் ஊடாகத் திருத்தம் செய்யப்பட்டது. வழுவின் தன்மை மற்றும் 2022 ஆம் ஆண்டில் முன்னர் சமர்பிக்கப்பட்ட நிதித்தொகை மற்றும் மீள வெளிப்படுத்தப்பட்ட மீதிகள் தொடர்பில் அதன் தாக்கம் பின்வருமாறு பொழிப்புப் படுத்தப்பட்டுள்ளது.

**2022 வருடத்தின் தவறுதல்களைத் திருத்தம் செய்ததன் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களின் தாக்கம்**

**நிதி செயலாற்றுகைக் கூற்றின் மீது அதன் தாக்கம்**

| **மீள வெளிப்படுத்தப்பட்ட உருப்படிகள்** | **பேரேட்டுக் குறிப்புக்கள்** | **மீள எடுத்துரைப்பதற்கு முன்னர் நிலுவை** | **சீராக்கங்கள்** | **மீள எடுத்துரைக்கப்பட்ட நிலுவை** |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| 2022 ஆம் ஆண்டுக்குரிய நிலையான வைப்புக்கள் வட்டி வருமானம் | 19,20 மற்றும் 23 | 13,320,836.98 | 1,224,543.72 | 14,545,380.70 |
| திறை சேரி உண்டியல் வட்டி வருமானம் | 22 | 45,069,600.93 | 8946.96 | 45,078,547.89 |
| **செலவுகள்** | **நாளேட்டுக் குறிப்பு** | **மீள எடுத்துரைப்பதற்கு முன்னர் நிலுவை** | **சீராக்கங்கள்** | **மீள எடுத்துரைக்கப்பட்ட நிலுவை** |
| நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவினங்கள் | 18 | 49,709,582.20 | 5,422,067.00 | 55,131,649.20 |
| நிருவாகச் செலவுகள் | 20 | 11,748,469.31 | (11,799.40) | 11,736,669.91 |
| **நிதி நிலைமை கூற்றின் மீது அதன் தாக்கம்** | | | | |
| **உருப்படிகள்** | **நாளேட்டுக் குறிப்பு** | **மீள எடுத்துரைப்பதற்கு முன்னர் நிலுவை** | **சீராக்கங்கள்** | **மீள எடுத்துரைக்கப்பட்ட நிலுவை** |
| கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி | 2.7.1 | 8,043,475.95 | (157,740.69) | 7,679,994.18 |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் ( PPE) | 2.7.2 | 1,918,738.56 | 1,155,069.23 | 3,073,807.79 |
| நிலையான வைப்புக்கள் | 19,20 மற்றும் 23 | 185,167,086.79 | 1,382,914.41 | 186,550,001.20 |

**03. 2023 ஆண்டுக்காக காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு**

| | குறிப்பு இல | 2023 | 2022 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| ஆண்டுக்குள் காப்புறுதி பங்களிப்பு | 3.1 | 73,297,844.61 | 73,176,590.47 |
| **கூட்டு** | | | |
| வருட இறுதியில் கி.வே. காப்புறுதி பங்களிப்பு | | 6,947,130.98 | 6,038,024.51 |
| | | 80,244,975.59 | 79,214,614.98 |
| **கழி** | | | |
| ஆரம்ப நிலுவைகளிலிருந்து கி.வே. காப்புறுதி பங்களிப்பு | | 6,038,024.51 | 7,037,439.32 |
| | | **74,206,951.08** | **72,177,175.66** |

**3.1ஆண்டுக்குள் காப்புறுதி பங்களிப்பு பெறுகை காசு அடிப்படை**

| காப்புறுதி கம்பனியின் பெயர் | சனவரி | பெப்ருவரி | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஆகஸ்ட் | செப்தெம்பர | ஒக்தோபர் | நவம்பர் | திசெம்பர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எச்என்பி ஜெனரல் இன்சுரன்ஸ் லிமிடெட் | 185,151.00 | 178,972.00 | 171,220.00 | 179,383.00 | 114,332.00 | 143,188.00 | 167,511.00 | 166,089.00 | 169,596.00 | 164,581.00 | 187,385.00 | 175,168.00 | 2,002,576.00 |
| அமானா தாக்காபுல் லிமிட்ட | 214,409.46 | 233,326.06 | 231,899.00 | 175,418.39 | 177,864.05 | 184,136.57 | 259,835.82 | 264,175.26 | 298,320.26 | 241,965.25 | 241,313.95 | 269,005.34 | 2,791,669.41 |
| செலிங்கோ பொதுக் காப்புறுதிக் கம்பனி | 782,406.00 | 864,040.00 | 783,705.00 | 813,254.00 | 581,372.00 | 668,634.00 | 616,930.00 | 755,908.00 | 809,247.00 | 691,091.00 | 847,888.00 | 753,320.62 | 8,967,795.62 |
| MBSL காப்புறுதிக் கம்பனி | 89,184.10 | 84,812.80 | 68,617.20 | 79,813.90 | 70,303.10 | 85,741.00 | 97,150.20 | 83,159.60 | 102,153.50 | 94,957.10 | 110,383.60 | 121,090.50 | 1,087,366.60 |
| கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி லிமிட்ட | 940,852.00 | 902,715.00 | 824,428.00 | 793,798.00 | 467,471.00 | 173,461.00 | 664,055.00 | 891,337.00 | 1,135,444.00 | 905,906.00 | 1,101,544.00 | 1,115,430.18 | 9,916,441.18 |
| ஓரியண்ட் காப்புறுதிக் கம்பனி | 81,380.56 | 251,037.76 | 183,510.52 | 136,443.48 | 110,787.68 | 146,257.12 | 151,553.08 | 176,700.00 | 179,132.36 | 205,742.92 | 155,818.52 | 157,381.60 | 1,935,745.60 |
| சணச பொதுக் காப்புறுதி நிறுவனம் | 212,326.34 | | 480,114.62 | 240,312.84 | 222,565.76 | 268,662.54 | 191,685.26 | 248,200.00 | 280,077.91 | 251,640.52 | 280,246.92 | 252,448.30 | 2,928,281.01 |
| எலையன்ஸ் லங்கா கம்பனி | 472,480.00 | 463,275.00 | 442,105.00 | 481,275.00 | 338,410.00 | 423,640.00 | 404,120.00 | 465,955.00 | 492,600.00 | 446,500.00 | 545,850.00 | 492,586.00 | 5,468,796.00 |
| இலங்கை காப்புறுதி கம்பனி லிமிட்ட் | 1,733,145.00 | 1,741,756.00 | 1,596,218.00 | 1,548,527.00 | 1,175,562.00 | 1,472,814.00 | 1,372,808.00 | 1,518,879.00 | 1,602,474.00 | 1,405,935.00 | 1,748,401.00 | 1,580,945.00 | 18,497,464.00 |
| பீபள்ஸ் இன்சூரன்ஸ் பீஎல்சீ | 335,975.78 | 403,499.87 | 337,942.54 | 366,585.99 | 203,711.26 | 199,565.88 | 232,105.79 | 281,159.10 | 303,506.02 | 304,210.00 | 352,327.00 | 307,452.00 | 3,628,041.23 |
| கொண்டினெண்டல் இன்சூரன்ஸ் லங்கா நிறுவனம் | 167,903.00 | 170,999.00 | 171,005.00 | 180,282.00 | 123,486.00 | 153,771.00 | 158,002.00 | 178,695.00 | 195,334.00 | 179,441.00 | 194,012.00 | 181,822.00 | 2,054,752.00 |
| LOLC பொதுக் காப்புறுதிக் கம்பனி லிமிட்ட | 189,432.00 | 866,445.00 | 531,622.00 | 416,576.00 | 351,696.00 | 491,367.00 | 576,445.00 | 540,595.00 | 561,297.00 | 540,767.00 | 543,837.00 | 554,065.00 | 6,164,144.00 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 58,413.27 | 53,366.72 | 55,114.09 | 238,767.91 | 49,002.66 | 49,756.41 | 41,449.58 | 52,171.83 | 43,922.56 | 35,876.00 | 57,384.30 | 48,747.63 | 783,972.96 |
| பெயர் பெஸ்ட் காப்புறுதி நிறுவனம் | 574,966.00 | 557,077.00 | 691,453.00 | 728,070.00 | 439,477.00 | 520,959.00 | 587,526.00 | 676,167.00 | 579,504.00 | 523,717.00 | 551,881.00 | 640,002.00 | 7,070,799.00 |
| **மொத்தம்** | 6,038,024.51 | 6,771,322.21 | 6,568,953.97 | 6,378,507.51 | 4,426,040.51 | 4,981,953.52 | 5,521,176.73 | 6,299,190.79 | 6,752,608.61 | 5,992,329.79 | 6,918,272.29 | 6,649,464.17 | 73,297,844.61 |

**வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை**
**2023 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிநிலைமை அறிக்கைகளுக்கான குறிப்புகள்**

**04. ஏனைய வருமானங்கள்**

| | குறிப்பு | 2023 | 2022 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| திறைசேரி உண்டியல் வட்டி | **7** | 67,202,489.69 | 45,078,547.89 |
| நிலையான வைப்புக்கள் வட்டி | **8** | 28,552,000.49 | 14,545,380.70 |
| | | 95,754,490.18 | 59,623,928.59 |

**வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை**
**2023 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிநிலைமை அறிக்கைகளுக்கான குறிப்புகள்**

**05. செலவினங்கள்**

**5.1 நிர்வாகச் செலவினங்கள்**

| | 2023 | 2022 (Restated) |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| சம்பளங்களும் வேதனாதிகளும் | 786,265.16 | 900,000.00 |
| எரிபொருள் கொடுப்பனவு | 536,411.25 | 626,690.00 |
| போக்குவரத்துக் கொடுப்பனவு | 487,096.77 | 300,000.00 |
| தொலைபேசி கொடுப்பனவு | 21,363.45 | 64,786.61 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 498,740.96 | 344,682.69 |
| எரிபொருள்கள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணை | 600,000.00 | 604,076.00 |
| சபை மற்றும் குழு உறுப்பினர்கள் கட்டணம் | 396,000.00 | 402,000.00 |
| பொறிகள்,இயந்திர உபகரணங்கள் மற்றும் உபகரண | 358,685.64 | 469,534.65 |
| வாகனப் பராமரிப்பு | 31,612.73 | 242,611.00 |
| காகிதாதிகள் மற்றும் அலுவலகப் பொருட்கள் | 697,505.55 | 905,667.99 |
| மின்சாரம், தொலைபேசி மற்றும் நீர் | 246,335.49 | 251,274.46 |
| பத்திரிக்கைகள் | 108,180.00 | 61,540.00 |
| அச்சிடல் மற்றும் மொழிபெயர்ப்பு | 442,412.50 | 109,767.50 |
| மேலதிக நேர வேலைக் கட்டணங்கள் | 568,499.16 | 506,187.31 |
| கூட்டங்களுக்கான உபசரணை | 106,796.00 | 92,794.65 |
| கணக்காய்வுக் கட்டணம் | | |
| இந்த ஆண்டுக்கான கணக்காய்வு கட்டணம் | 260,820.00 | 221,400.00 |
| கடந்த ஆண்டின் பற்றாக்குறை(அதிகப்படியான) ஒது | 60,820.00 | |
| பிரயாணச் செலவுகள் | 112,714.00 | 142,436.00 |
| தேய்மானம் | 1,247,764.35 | 810,629.91 |
| அஞ்ஞல் கட்டணம் | 24,085.00 | 44,855.00 |
| வங்கிக் கட்டணம் | - | 750.00 |
| பயிலுனர்களுக்காக கொடுப்பனவுகள் | - | - |
| சுத்திகரிப்பு கட்டணம் | 776,999.99 | 732,400.00 |
| நானாவிதச் செலவினங்கள் | 105,232.67 | 98,899.99 |
| பணியாட்குழு பயிற்சிகள் | 210,000.00 | |
| NCRS வளாகம் பழுதுபார்த்தல் | 498,870.00 | |
| நன்கொடை | | 3,803,686.15 |
| | **9,183,210.68** | **11,736,669.91** |

**5.2 வீதிப் பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினம்**

| | குறிப்பு | 2023 | 2022 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| வீதிப் பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | | 20,779,309.68 | 38,031,649.20 |
| மோதிவிட்டு தப்பியோடியதன் காரணமாக வழங்கிய இழப்பீடு | | 7,300,000.00 | 17,100,000.00 |
| | | **28,079,309.68** | **55,131,649.20** |

வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை

2023 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான

நிதிநிலைமை அறிக்கைகளுக்கான குறிப்புகள்

06.சொத்துக்கள் , பொறிகள் மற்றும் உபரணங்கள்

| | கணனிகள் | நிழற்பட பிரதி /அச்சீட்டு மற்றும் ஸ்கேன் கருவிகள் | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | குளிரூட்டிகள் | ஊடக உபகரணங்கள் | ஏனைய சொத்துக்கள் | குளிர்சாதனப் பெட்டிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| கிரயம் / மீ மதிப்பீடு | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2023.01.01 ஆம் திகதியில் மீதி | 1,155,069.23 | 887,300.00 | 702,472.50 | 556,559.44 | 1,577,412.50 | 79,981.50 | 133,000.00 | 5,091,795.17 |
| வருடத்துக்குள் | | | | | | | | - |
| சேர்த்தல்கள் | 2,559,200.00 | | | | | | | 2,559,200.00 |
| அப்புறப்படுத்தல் | - | | | | | | | - |
| 2023.12.31ஆம் திகதியில் மீதி | **3,714,269.23** | **887,300.00** | **702,472.50** | **556,559.44** | **1,577,412.50** | **79,981.50** | **133,000.00** | 7,650,995.17 |
| | | | | | | | | |
| திரண்ட தேய்மானம் | | | | | | | | |
| 2023.01.01 ஆம் திகதியில் மீதி (Restated) | | 104,257.26 | 427,845.17 | 98,749.58 | 1,232,571.65 | 45,157.56 | 109,406.16 | 2,017,987.38 |
| வருடத்திற்கான கட்டணம் | 809,371.69 | 110,912.50 | 70,247.25 | 69,569.93 | 154,071.46 | 9,997.69 | 23,593.84 | 1,247,764.35 |
| அப்புறப்படுத்தல்கள் | - | - | - | - | - | - | - | - |
| 2023.12.31 ஆம் திகதியில் மீதி | **809,371.69** | **215,169.76** | **498,092.42** | **168,319.51** | **1,386,643.10** | **55,155.25** | **133,000.00** | **3,265,751.73** |
| | | | | | | | | |
| தேறிய ஏட்டுப் பெறுமதி | | | | | | | | |
| 2022/12/31 ஆம் திகதியில் | 1,155,069.23 | 783,042.74 | 274,627.33 | 457,809.86 | 344,840.85 | 34,823.94 | 23,593.84 | 3,073,807.79 |
| | | | | | | | | |
| 2023.12.31 ஆம் திகதியில் மீதி | **2,904,897.54** | **672,130.24** | **204,380.08** | **388,239.93** | **190,769.40** | **24,826.25** | **-** | **4,385,243.44** |

6.1 முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்கள் ,பொறிகள் மற்றும் உபகரணங்கள் பயன்பாட்டில் உள்ளன.

வழக்கமான செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுகின்ற முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்கள் ,பொறிகள் மற்றும் உபகரணங்கள் PPE இல் உள்ளடக்கப்பட்டுள்ளது . அறிக்கையிடல் திகதியில் இன்னும் பயன்பாட்டில் உள்ள முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்கள் கிரயம்/மீள் மதிப்பீட்டுப் பெறுமதி பின்வருமாறு .

## வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை
## 2023 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான
## நிதிநிலைமை அறிக்கைகளுக்கான குறிப்புகள்

07.திறைசேரி உண்டியல்கள்

| பட்டியல் இல | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முதலீடு செய்த தொகை | கிடைத்த வட்டி வருமானம் | 2023 திசெம்பர் 31ஆம் திகதியில் கி. வே. வட்டி வருமானம் | 2023 ஆம் ஆண்டுக்கான வட்டி வருமானம் |
|---|---|---|---|---|
| **1** | 17,844,841.28 | 2,876,131.41 | 183,840.90 | 3,059,972.30 |
| 2 | 60,925,687.24 | 9,911,599.30 | 481,212.01 | 10,392,811.30 |
| 3 | 10,684,894.39 | 1,722,131.36 | 110,077.78 | 1,832,209.15 |
| 4 | 15,722,950.31 | 2,534,136.94 | 161,980.78 | 2,696,117.72 |
| 5 | 27,366,846.70 | 4,497,867.55 | 198,862.59 | 4,696,730.14 |
| 6 | 1,122,706.76 | 184,522.14 | 8,158.21 | 192,680.35 |
| 7 | 43,426,847.35 | 6,430,268.90 | 1,116,690.45 | 7,546,959.34 |
| 8 | 18,206,717.99 | 2,353,289.70 | 776,543.74 | 3,129,833.45 |
| 9 | 13,895,125.77 | 2,239,538.35 | 143,150.19 | 2,382,688.54 |
| 10 | 138,402,933.56 | 22,747,182.78 | 1,005,712.96 | 23,752,895.74 |
| 11 | 43,335,231.85 | 6,372,769.58 | 1,114,334.62 | 7,487,104.21 |
| 12 | 119,321.93 | 19,611.18 | 867.06 | 20,478.24 |
| 13 | 69,974.43 | 11,500.73 | 508.47 | 12,009.21 |
| மொத்தம் | **391,124,079.56** | **61,900,549.94** | **5,301,939.75** | **67,202,489.69** |

08. நிலையான வைப்புக்கள்

| நி .வை. இல | கணக்கு இல. | தொகை | 2023ஆம் ஆண்டுக்கான வட்டி வருமானம் | 2023திசெம்பர் 31 ஆம் திகதியில் கி. வே.வட்டி வருமானம் |
|---|---|---|---|---|
| 1 | 5052659 | 10,000,000.00 | 1,267,534.25 | 78,082.19 |
| 2 | 6462242 | 3,000,000.00 | 370,109.58 | 11,243.84 |
| 3 | 6061516 | 1,000,000.00 | 122,276.70 | 5,387.67 |
| 4 | 83251129 | 46,009,303.35 | 5,468,587.59 | 998,376.74 |
| 5 | 83250939 | 60,584,274.72 | 5,884,558.75 | 1,179,484.54 |
| 6 | 204-60-01-00023436-6 | 53,384,081.00 | 6,715,025.26 | 6,326,159.86 |
| 7 | 204-60-01-00026713-3 | 34,138,515.24 | 5,561,059.03 | 1,299,929.19 |
| 8 | 90785450 | 40,000,000.00 | 3,162,849.32 | 385,205.48 |
| **மொத்தம்** | | **248,116,174.31** | **28,552,000.49** | **10,283,869.50** |

**வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை**
**2023 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிநிலைமை அறிக்கைகளுக்கான குறிப்புகள்**

| | 09. வங்கி மீதி/ காசு | 2023 | 2022 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| | வங்கி மீதி | 41,590,700.67 | 47,858,688.01 |
| **கழி** | முன்வைக்கப்படாத கொடுப்பனவுகள் | 1,245,664.29 | - |
| **கூட்டு** | மாற்றப்படாத பற்றுச் சீட்டு | 282,102.84 | |
| | **காசேட்டு மீதி** | 40,627,139.22 | 47,858,688.01 |

| வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை | |
|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் பரீட்சை மீதி | |

| கணக்கின் பெயர் | வரவு | செலவு |
|---|---|---|
| சொத்துக்கள் | | |
| கணனிகள் | 3,714,269.23 | |
| புகைப்பட பிரதி,அச்சிடல்,தொலை நகல் இயந்திரம் | 887,300.00 | |
| தளபாடங்கள் மற்றும்பொருத்துக்கள் | 702,472.50 | |
| குளிரூட்டிகள் /வளிச் சீராக்கிகள் | 556,559.44 | |
| ஊடக உபகரணங்கள் | 1,577,412.50 | |
| ஏனைய சொத்துக்கள் | 79,981.50 | |
| குளிர் சாதனப்பெட்டிகள் | 133,000.00 | |
| திரண்ட தேய்மானம் | | |
| கணனிகள் | | 809,371.69 |
| புகைப்பட பிரதி,அச்சிடல்,தொலை நகல் இயந்திரம் | | 215,169.76 |
| தளபாடங்கள் மற்றும்பொருத்துக்கள் | | 498,092.42 |
| குளிரூட்டிகள் /வளிச் சீராக்கிகள் | | 168,319.51 |
| ஊடக உபகரணங்கள் | | 1,386,643.11 |
| ஏனையவை | | 55,155.25 |
| குளிர் சாதனப்பெட்டிகள் | | 133,000.00 |
| நிலையானவைப்புக்கள் | 248,116,174.31 | |
| திறைசேரி உய்டியல்கள் | 391,124,079.56 | |
| காப்புறுதி கம்பனிகளிடமிருந்து கி.வேண்டியவைகள் | 6,947,130.98 | |
| நிதியக் க/கு | | 573,742,286.80 |
| காப்புறுதி கம்பனிகளிடமிருந்து பங்களிப்பு | | 74,206,951.08 |
| நி.வை. வட்டிக் க/கு | | 28,552,000.48 |
| கிடைக்க வேண்டிய நி.வை. வட்டிக் க/கு | 10,283,869.50 | |
| திறைசேரி உண்டியல் வட்டிக் க/கு | | 67,202,489.69 |
| கிவேண்டிய திறைசேரி உண்டியல் வட்டிக் க/கு | 5,301,939.75 | |
| செ.வே .கணக்காய்வுக் கட்டணம் | | 260,820.00 |
| கணக்காய்வுக் கட்டணம் | 321,640.00 | |
| சம்பளங்கள் மற்றும் கூலிகள் | 786,265.16 | |
| எரிபொருள் கொடுப்பனவு | 536,411.25 | |
| போக்குவரத்து கட்டணம் | 487,096.77 | |
| தொலைபேசிக் கொடுப்பனவு | 21,363.45 | |
| ஏனைய கொடுப்பனவு | 498,740.96 | |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணை | 600,000.00 | |
| சபை மற்றும் குழு உறுப்பினர் கட்டணம் | 396,000.00 | |
| பொறிகள்,இயந்திரம் உபகரணங்கள் பராமரிப்பு | 358,685.64 | |
| காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 697,505.55 | |
| தொலைபேசிக் கட்டணம் | 246,335.49 | |
| பத்திரிகைகள் | 108,180.00 | |
| அச்சிடல் மற்றும் மொழிபெயர்ப்பு | 442,412.50 | |
| மேலதிக நேர வேலை கட்டணம் | 568,499.16 | |
| பிரயாணச்செலவுகள் | 112,714.00 | |
| கூட்டங்கள், உபசரணை | 106,796.00 | |
| நானாவிதசெலவுகள் | 105,232.67 | |
| சுத்தம் செய்தல் கட்டணம் | 776,999.99 | |
| NCRS வளாகம் மறுசீரமைப்பு | 498,870.00 | |
| வங்கி மீதி | 40,627,139.22 | |
| ஊழியர் பயிற்சி | 210,000.00 | |
| அஞ்ஞல் கட்டணம் | 24,085.00 | |
| வாகனங்கள் பராமரிப்பு | 31,612.73 | |
| நட்டஈடு - மேதிவிட்டு தப்பிச் செல்லுதல் | 7,300,000.00 | |
| இறுதி அட்டுறு செலவுகள் | | 83,349.06 |
| பெறுமானத் தேய்வு | 1,247,764.35 | |
| நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவுகள் | 20,779,309.68 | |
| முத்திரை கட்டணம் | - | |
| செவே. முத்திரை கட்டணம் | | 200.00 |
| | **747,313,848.85** | **747,313,848.85** |

# கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கை 2023

# தேசிய கணக்காய்வு அலுவலகம்.

எனது இல: சீஓஏ/சீ/என்.சீ.ஆர்.எஸ்/2023/எப்.ஏ திகதி: 2024 மே மாதம் 31ஆம் திகதி

**தவிசாளர்,**

**வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை,**

**வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அவர்களின் அறிக்கை.**

## 1. நிதிக் கூற்றுக்கள்.

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்.

வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் பொழிப்புப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையொன்றை எடுத்தியம்புகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இறுதிக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 06 ஆம் இலக்க ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான அட்டவணையில் காட்டப்பட்டிருந்த ரூபா. 4,385,243 பெறுமதி கொண்ட 7 வகுதிகளுக்குரிய நிலையான சொத்துக்களின் பெறுமதியை உறுதி செய்து கொள்வதற்காக அதனுடன் தொடர்புடைய விரிவான அட்டவணைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் ஆவணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால், அந்த நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் அதனுடன் தொடர்புடையதான பெறுமானத் தேய்வுப் பெறுமதிகளின் பிழையற்றதன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியவில்லை.

இலங்கை கணக்காய்வு தர நியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய் மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம் படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு கணக்காய்வுச் சாட்சிகள் போதுமானதாகவும் மற்றும் பொருத்தமானதாகவும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என நம்புகின்றேன்.

## 1.3 சபையின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் என்னிடம் வழங்குவதற்கு எதிர் பார்க்கின்ற, சபையின் 2023 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறல் வேண்டும்

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்வின் பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமானவிடத்து, வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்கையில் ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக் கொண்ட எனது அறிவுக்கமைவாக பொருண்மையாகப் பொருந்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்ளுதலாகும்.

சபையின் 2023 ஆவது வருடாந்த அறிக்கை வாசிக்கும் போது, அதில் தகவல்கள் பொருண்மையாக தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதென நான் முடிவு செய்தால், செவ்வைப்படுத்துவதற்காக நிருவகிக்கும் தரப்புகளிடம் அவ்விடயங்களை அறிக்கையிடல் வேண்டும். மேலும் செவ்வைப்படுத்தாமல் தவறாக காண்பிக்கப்பட்டிருப்பின், அவை அரசியலமைப்பின் 154(6) ஆவது பிரிவின் பிராகரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 1.4. நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்.

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணிவருதல் தல் வேண்டும்.

## 1.5. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித் தனியாகவோ அல்லது கூட்டு மொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

நியாயமாக இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சக்தி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை

மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபையின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், வெளிப்படுத்தல்களுடன் அவ்வாறான நிதிக் கூற்றுக்களிலுள்ள தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றன என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்பினர்ரை அறிவுறுத்துகின்றேன்.

**2.ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.**

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் 1.2 அபிப்பிராயத்துக்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்கள் தவிர, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்குத் தேவையான எல்லாத் தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவனம் பேணிச் சென்றிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி சபையின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி சபையின் கட்டுப்பாட்டுச் சபையில் உள்ள எவரேனுமொரு உறுப்பினர் சபையுடன் தொடர்புகொண்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு அப்பாற்பட்டுள்ளது என்பது தொடர்பாக,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான

சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாது செயற்படுதல் தொடர்பாக,

| | சட்ட விதிகள்/ ஏற்பாடுகள் என்பவற்றின் தொடர் | இணக்கமின்மை/ இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் கோப்பின் ஒழுங்கு விதி 110. | சேதங்கள் பற்றிய ஆவணமொன்று பேணி வரப்படவில்லை. |
| (ஆ) | 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் NP/5P/5dg/17. ஆம் இலக்க சுற்றறிக்கை. | நிறுவனம் தொடர்பாக நிலையான/பேண்தகு அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் செயல்படுதல் தொடர்பாக,

(அ) 2014 திசெம்பர் 12, ஆம் திகதிய பாராளுமன்ற விசேட குழுவின் பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் 351 இன் 10.6 ஆம் இலக்க பிரிவுக்கமைய, நாடின் வீதிப் பாதுகாப்பை நன்றாக முகாமைத்துவம் செய்வதற்காக இந்த நிறுவனத்தை தேசிய ஆணைக்குழுவாக மாற்றியமைத்து அதற்குத் தேவையான அதிகாரங்கள், தத்துவங்களை மற்றும் நிதி வளங்கள் வழங்குதல், ஆணைக்குழுவின் பணிகளுக்கு உதவுவதற்காகத் தேவையான அனைத்து கூறுகள் மற்றும் அதிக தகுதி வாய்ந்த மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்ட ஒரு முழுமையான செயலகம் நிறுவப்படல் வேண்டுமெனினும், மேற் கூறப்பட்ட விதிகளின் படி இது வரை இந்த நிறுவனம் ஓர் ஆணைக்குழுவாக தாபிக்கப்படாமை காரணமாக இந்த சபையின் செயல்பாடுகளைச் செய்வதற்கு முறையான சட்ட அதிகாரம் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

(ஆ) 2245/31 ஆம் இலக்க 2021 செப்தெம்பர் 17 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் 14 காப்புறுதி நிறுவனங்களால் மூன்றாம் தரப்பு மோட்டார் வாகனக் காப்புறுதி வருமானத்தில் நூற்றுக்கு 02 சதவீதப் பங்களிப்பாக சபைக்கு அனுப்பப்பட்டிருந்த பெறுமதி ரூபா. 74,206,951 கிடைக்க வேண்டிய மொத்தப் பெறுமதியா என்பதை உறுதி செய்து கொள்ளக்கூடிய விதத்திலான உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறையொன்று முகாமைத்துவத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பணியாட் குழுவுக்காக திறைசேரியின் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டுமெனினும், இதுவரை இந்த நிறுவனத்தை ஆணைக்குழுவாக தாபிக்கப்படாமை காரணமாக, போக்குவரத்து அமைச்சின் 14 அதிகாரிகளைக் கொண்ட ஒரு பணியாட் குழு இணைப்புச் செய்யப்பட்டு தொடர்புடைய கடமைகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, பின்வரும் அவதானிப்புக்கள் தவிர, தேசிய சபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் கால வரையறைகளினுள் ஏற்புடைய சட்டங்களுக்கு இணங்கியொழுகியதாக பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதென,

(அ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2014 பெப்ருவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்கம் கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் (4) (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த செயல் திட்டம் /அமுலாக்கல் திட்டத்துடன் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த பெறுகைத் திட்டத்தில் ரூபா. 120 மில்லியன் பெறுமதியான 31 செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும், ரூபா. 51.51 மில்லியன் பெறுமதியான 20 பெறுகை நடவடிக்கைகளில் எந்தவிதமான செயலாற்றுகையும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. திட்டமிடப்பட்ட 11 பெறுகை நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கிடப்பட்ட நோக்கங்கள் திட்டமிடப்பட்ட அடிப்டையில் அடையப்பட்டிருக்கவில்லை எனவும், அவற்றின் நிதிச் செயலாற்றுகை சராசரியாக நூற்றுக்கு 10 சதவீதம் வரையானதாக காணப்பட்டதெனவும் அவதானிக்கபட்டதால் நிறுவனத்தினால். 2023 ஆம்

ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட பெறுகை திட்டம் நடைமுறைக்கு மாறானதெனவும், அதனை வினைத்திறன் கொண்டதாக செயல்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.


(ஆ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான நிறுவனத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த வருமானம் மற்றும் மூலதனச் செலவுகள் முறையே ரூபா. 114 மில்லியன் மற்றும் ரூபா. 119 மில்லியன் ஆகும் என்பதோடு உண்மையான வருமானம் ரூபா. 170 மில்லியன் மற்றும் உண்மையான மூலதனச் செலவுகள் ரூபா. 28 மில்லியன் ஆக இருந்தமையினால், மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் உண்மையான வருமானத்திற்கும் இடையில் ரூபா. 56 மில்லியன், அதாவது நூற்றுக்கு 49 சதவீதம் நேர் மறையான வேறுபாடும், மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவுகளுக்கும் உண்மையான செலவினங்களுக்கும் இடையில் ரூபா. 91.20 மில்லியன், அதாவது நூற்றுக்கு 76 சதவீதம் எதிர் மறையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், சபையினால் வரவு செலவுத் திட்ட ஆவணம் ஒரு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட அமுலாக்கல் திட்டத்தின் 05 தூண்களின் (Pillars) கீழ் செயற்படுத்தப்பட வேண்டிய ரூபா. 109.7 மில்லியன் பெறுமதியான 22 கருத்திட்டங்கள் தொடர்பாக 35 பணிகள் அடையாளம் காணப்பட்டு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ரூபா. 55.175 மில்லியன் பெறுமதியான 21 பணிகள், அதாவது நூற்றுக்கு 50 சதவீதம், முழுமையாக நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. பின்வரும் வியங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2018 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டு, 2022 ஆம் ஆண்டின் அமுலாக்கல் திட்டத்தின் தூண் 01 இன் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 3 வது கருத்திட்டம், 1 ஆம் செயற்பாடாக **"மோட்டார் சைக்கிள் விபத்துக்களைக் குறைத்தல்"** குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு பல்கலைக் கழக பேராசிரியர் ஒருவரிடம் இணக்கப்பாட்டு ஒப்பந்தம் ஒன்றிட்கமைய ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த ஆராய்ச்சி 4 கட்டங்களாக நடாத்தப்பட்டு 2022 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு ஒப்டைக்கப்படவிருந்த போதிலும், அந்தத் திகதியில் அது நிறைவு

செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, 2023 ஆம் ஆண்டில் 2 கட்டங்கள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டு சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தற்போது, மீதமுள்ள 2 கட்ட ஆராய்ச்சிகளையும் செயற்படுத்த முடியாத சூழ்நிலையொன்று ஏற்பட்டுள்ளதோடு இந்தக் கருத்திட்டத்திற்காக இதுவரை செலவிடப்பட்டுள்ள ரூபா. 700,000 தொகை பயனற்றதாகிக் காணப்பட்டது. மேலும், கருத்திட்டத்தை முன்னோக்கி எடுத்துச் செல்வதில் காணப்படுகின்ற நிச்சயமற்ற தன்மை மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மீறப்பட்டமை தொடர்பில் நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. அமுலாக்கல் திட்டத்தின் தூண் 01 இன் கீழ், 5 வது கருத்திட்டமாக, வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அதிகாரியை பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலக மட்டங்களில் நியமனம் செய்து, அவர்களுக்குப் பணிப்பொறுப்புகளை ஒப்படைத்து மாகாண மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி பிராந்திய ரீதியாக செயற்படுகின்ற வீதிப் பாதுகாப்புக் குழுவுடன் இந்த அதிகாரிகளை இணைப்புச் செய்வதற்கு 2022 ஆம் ஆண்டில் ரூபா. 143,055 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், நிறுவன மற்றும் நிதிச் சிக்கல்களின் கீழ் அதனைச் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட அமுலாக்கல் திட்டத்திலிருந்து இந்தத் திட்டம் நீக்கப்பட்டு, e – நூலகம் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டமையினால எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.



**ஆங்கிலத்தில்/ஒப்பம்**
டப்ளியூ.பீ.சீ. விக்கிரமரத்ன.
கணக்காய்வாளர் அதிபதி,

**2023 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் நிதிநிலைமை அறிக்கைகள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கண்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் படி கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை தொடர்பில் கருத்துத்தெரிவித்தல்.**

**1.2 முனைப்பளியுள்ள கருத்துக்கான அடிப்படை**

வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் தற்போதைய நிலையான சொத்துக்களில் குறிப்பிடத்தக்க அளவு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டு பின்னர் வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள் ஆகும் என்பதோடு சில சொத்துக்கள் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் ஆகும். இந்த சொத்துக்களின் பெறுமதிகளைக் குறிப்பிடும் நிலையான சொத்துப் பதிவேடொன்று வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையிடம் இல்லை என்பதோடு முந்திய ஆண்டின் இறுதிக் கணக்குகளில் உள்ள பெறுமதிக்களுடன் புதிய கொள்வனவுகள் மூலம் ஏற்படும் அதிகரிப்பு பெறுமதியை சீராக்கம் செய்வது முன் கொண்டு வரப்பட்ட பெறுமதி 2023 இறுதிக் கணக்குகளில் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும், வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்ட பெறுமதியை இனங்காண்பதற்கும் சொத்துக்களுக்குரிய நிலையான சொத்துப் பதிவேட்டை அந்தத் தகவலின் அடிப்படையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென இதற்கு முன்னர் 2023 கணக்காய்வு அறிக்கையின் வரைவு அறிக்கைக்கான பதிலாக குறிப்பிடப்பட்டது.

அதன் படி, நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்குத் தேவையான மீள் மதிப்பீட்டுக் குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளதோடு, நிலையான சொத்துக்களின் மீள் மதிப்பீடு தற்போது நடைபெற்று வருகிறது.

2.2.2.

**(அ) இழப்புக்கள்/சேதம் தொடர்பான பதிவேடொன்று பராமரிக்கப்படவில்லை**

நிதி ஒழுங்கு விதி 110 இன் படி வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையினால் ஒரு இழப்பு / சேதப் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இன்று வரை அதில் அறிக்கையிடுவதற்கான சேதமோ அல்லது இழப்போ பதிவாகவில்லை.

**(ஆ) ஒரு பேண்தகு அபிவிருத்தி திட்மொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.**

வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக்கு பேண்தகு அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையினால் 2022 - 2024 ஆண்டுகளுக்கான மூன்று ஆண்டுகால செயல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டதோடு, இது வீதிப் பாதுகாப்பு தொடர்பில் செயற்படும் போது பத்தாண்டுக்கான ஐக்கிய நாடுகளின் வீதிப் பாதுகாப்பு ஒத்துழைப்பினால் முன்மொழியப்பட்ட ,

- தூண் 01: வீதிப் பாதுகாப்பு முகாமைத்துவம்

- தூண் 02: பாதுகாப்பான வீதிகள் மற்றும் இடப்பெயர்வு/ அசைவு

- தூண் 03: மிகப் பாதுகாப்பான வாகனங்கள்

- தூண் 04: மிகப் பாதுகாப்பாக வீதிகளைப் பயன்படுத்துவோர்

- தூண் 05: விபத்துக்குப் பின்னரான பதில்கள்

ஆகிய ஐந்து தூண் அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டதாகும். மேலும், வீதிப் பாதுகாப்பை பிரதிநிதித்துவம்செய்வதற்கான குறிப்பான பேண்தகு அபிவிருத்தி இலக்கு எதுவும் இல்லை எனினும், சமூகப் - பொருளாதார மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள வீதிப் பாதுகாப்புத் தொடர்பான இலக்குகளான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் உள்ளூர் நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றின் மூலம் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

| பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் | போக்குவரத்துப் பிரிவுக்குரிய இலக்கு |
|---|---|
| **3 ஆம் இலக்கு** சிறந்த சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு | **3.6 ஆம் இலக்கு**<br><br>வீதி விபத்துகளால் ஏற்படுகின்ற உலகளாவிய இறப்புகள் மற்றும் காயங்களில் எண்ணிக்கையை அரைவாசியாக் குறைத்தல். |
| **11 ஆம் இலக்கு:** நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் | **11.2 ஆம் இலக்கு**<br><br>2030 ஆம் ஆண்டாகும் போது, பாதிப்புக்களுக்கு உட்படக்கூடிய நபர்கள், பெண்கள், சிறுவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் குறிப்பாக கவனம் செலுத்தி விசேடமாக பொதுப் போக்குவரத்தை விரிவுபடுத்தி வீதிப் பாதுகாப்பை மேம்படுத்தி அனைவருக்கும் பாதுகாப்பான, குறைந்த விலையில், அணுகக்கூடிய மற்றும் பேண்தகு போக்குவரத்து அமைப்புக்களுக்கான அணுகலை வழங்குதல் |

2024 ஆம் ஆண்டிற்கான பேண்தகு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படவில்லை. 2025 ஆம் ஆண்டில் உள்ளடக்க திட்டமொன்றைத் தயாரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் போது பேண்தகு அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது எனவும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

**2.2.3.**

**(அ)** வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையை ஒரு ஆணைக்குழுவாக மாற்றுவது தொடர்பாக தயாரிக்கப்பட்ட இறுதி சட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், அந்தப் பணிகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு சனாதிபதி செயலகம் மூலம் 2023 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

அந்த சட்ட வரைவு 2024 ஆம் ஆண்டில் சட்ட வரைஞரிடம் மீண்டும் சமர்ப்பிப்பதற்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் சட்டப் பிரிவு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. சட்ட வரைஞரினால் குறித்த சட்ட வரைவு தொடர்பில் அவதானிப்புகள் கோரப்பட்டிருந்ததோடு, குறித்த அவதானிப்புக்கள் மீண்டும் சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் சட்டப் பிரிவினால் வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக்குத் அறிவிக்கப்பட்டுள்ளது.

**(ஆ)** காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக்கு கிடைக்கப்பெறுகின்ற காப்புறுதி பங்களிப்புத் தொகையின் பிழையற்ற தன்மையைச் உறுதி செய்து கொள்வதற்கான ஒரு குறிப்பான திட்டத்தைத் தயாரிப்பதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் காப்புறுதி நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட போதிலும், அந்தத் தொகையைச் உறுதி செய்து கொள்வதற்கான தகவல்களை முறையாக வழங்குவதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வசமும் சரியான தகவல்கள் இல்லை என தெரிவிக்கப்பட்டமையினால் வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை, தேசிய காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் காப்புறுதி நிறுவனங்களின் இணக்கப்பாட்டின் மீது, வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை மூலம் காப்புறுதி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள படிவம், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைமை உள்ளக கணக்காய்வாளர் அல்லது தலைமை நிதி அலுவலரின் உறுதிப்படுத்தலுடன், மாதாந்தம் வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

எவ்வாறாயினும், இது தொடர்பாக ஒரு முறையான நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்கான தேவையான ஆரம்ப கட்டமான நடவடிக்கையாக காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்படும் என்பதையும் தயவு செய்து தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ), வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையை ஒரு ஆணைக்குழுவாக மாற்றம் செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட இறுதி சட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அந்தப் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு சனாதிபதி செயலகம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சட்ட வரைவை 2024 ஆம் ஆண்டின் போது சட்ட வரைஞரிடம் மீண்டும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக்காக DMS/1855 மற்றும் 2024.01.08 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் மூலம் 05 அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் DMS/1855, 2024.04.19 திகதிய கடிதம் மூலமாக பணிப்பாளர்,

உதவி பணிப்பாளர் (தொழில்நுட்பம்) மற்றும் கணக்காளர் ஆகிய பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**2.2.4. (அ), (ஆ)** வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் தலைவர் பதவி 2023.01.23 ஆம் திகதி தொடக்கம் 2023.03.09 ஆம் திகதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டதோடு, வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் உறுப்பினர்களின் பதவிக்காலம் 2023.01.28 ஆம் திகதியுடன் முடிவடைந்த பின்னர், புதிய சபை உறுப்பினர்கள் 2023.03.16 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டனர். 2023.03.16 ஆம் திகதி வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக் கூட்டத்திற்குப் பின்னர் வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. இதன் காரணமாக, 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான 2023 செயல் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு முடியவில்லை.

2023.06.16 ஆம் திகதி நடைபெற்ற வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக் கூட்டத்தின் போது வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் / அமுலாக்கல் திட்டம், பெறுகைத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2023.08.09 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்ட அத்திட்டத்திற்கான போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், எதிர்பார்க்கப்பட்டவாறு பணிகளை நிறைவு செய்ய முடியவில்லை என்பதால், 2023 திருத்தம் செய்யப்பட்ட செயல் திட்டம், பெறுகைத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்ட ஆவணம் ஆகியவற்றில் திருத்தங்களைச் சேர்த்து 2024 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் , பெறுகைத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

மேலும், 2024 செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த கருத்திட்டங்களில் நடைமுறை ரீதியில் இந்த ஆண்டினுள் செயற்படுத்துவது அசௌகரியமானதாகக் கருதப்பட்ட கருத்திட்டங்களை நீக்கிவிட்டு 2024 செயல் திட்டம் திருத்தம் செய்யப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதென்பதை தயவன்புடன் அறியத்தருகின்றேன்.

2025 ஆம் ஆண்டில், முன்னைய ஆண்டில் ஏற்பட்ட சிக்கல்களைக் குறைத்துக் கொண்டு, மிகவும் வினைத்திறனான முறையில் அந்தத் திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற செயலாற்றுகையை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவன்புடன் அறியத்தருகின்றேன்.

**(இ) i.** 2023 ஆம் ஆண்டு முடிவடையும் போது, மோட்டார் சைக்கிள் விபத்துகள் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளின் 2 கட்டங்கள் நிறைவு செய்யப்பட்டு அதன் அறிக்கைகள் வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ளதோடு அதன் மீதமுள்ள 2 கட்டங்களைச் செயற்படுத்துவதற்கு, சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகப் பேராசிரியர் வெளிநாடு சென்றுள்ள காரணத்தால் முடியாமல் போயுள்ளது. அதலால், 2024 ஆம் ஆண்டில், சம்பந்தப்பட்ட பேராசிரியர் அவர்களால் மீதமுள்ள இரண்டு அறிக்கைகளில் ஒரு அறிக்கை வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய சபையிடம் உசாவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் போது மீதமுள்ள அறிக்கையையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேசிய சபையினால் முன்மொழியப்பட்டுள்ளது. அதன்படி, தொடர்புடைய அறிக்கையை வழங்குமாறு பேராசிரியருக்குத் தெரிவிக்கப்பட்ட பின்னர், அந்த அறிக்கையும் வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பான மீண்டும் தேசிய சபையுடன் கலந்தாலோசித்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவு செய்து அறிவித்துக் கொள்கிறேன்.

**ii.** வீதிப் பாதுகாப்பு மற்றும் வீதி விபத்துக்களைக் குறைத்தல் தொடர்பாக பணியாற்றுவதற்காக வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அலுவலரை பிரதேச செயலக மட்டத்தில் நியமனம் செய்யும் நோக்கில் இந்தக் கருத்திட்டம் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக 2022 ஆம் ஆண்டில் நாட்டின் 256 பிரதேச செயலகங்களிலிருந்து பெயர் குறித்த நியமனங்கள் கிடைக்கப் பெற்றிருந்தன.

கிடைக்கப் பெற்றிருந்த பெயர் குறித்த நியமனங்களில், மேல் மாகாணத்தின் அனைத்து பிரதேச செயலகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் 2022.11.22 ஆம் திகதி கம்பஹா மாவட்ட செயலகத்தில் நடாத்தப்பட்டது. குறித்த நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்களுக்கு, தங்கள் நிரல் அமைச்சினால் விதிக்கப்பட்ட கடமைப் பட்டியல் மூலம் வீதிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் மற்றும் வீதி விபத்துகளைக் குறைப்பதற்காக வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் கடமைகளைச் மேற்கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்படவில்லை எனவும், இது தொடர்பாக உதவி வழங்குவதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையிடம் கோரிக்கை செய்யப்பட்டது.

அதன் பிரகாரம், இது தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதோடு, இந்த நோக்கத்திற்காக புரிந்துணர்வு

ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடவும், பிரதேச செயலகத்தால் பெயர் குறிக்கப்படுகின்ற அலுவலரொவருக்கு கொடுப்பனவொன்றை வழங்குவது பொருத்தமானதெனவும் முன்மொழியப்பட்டது. அதகமைய, இந்தக் கருத்திட்டம் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுடன் இணைந்து பணியாற்றுவதற்காக SLIDA நிறுவனத்தின் உதவியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருப்பினும், 2023 திருத்தப்பட்ட செயல் திட்டத்தைத் தயாரிக்கும் போது, நடைமுறையில் இந்தக் கருத் திட்டத்தை நடைமுறை ரீதியில் செயல்படுத்துவதில் உள்ள அசௌகரியங்கள் காரணமாக இந்தக் கருத்திட்டத்தை நிறுத்தி விடுவதற்கு தேசிய சபையினால் 2023 திருத்தம் செய்யப்பட்ட அமுலாக்கல் திட்டத்தை / செயல் திட்டத்தை தயாரிக்கும் போது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை தயவு செய்து அறிவித்துக் கொள்கின்றேன்.

**ஈ)** 2023.06.16 ஆம் திகதி நடைபெற்ற வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக் கூட்டத்தின் போது வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் / அமுலாக்கல் திட்டம், பெறுகைத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்ட ஆவணம் ஆகியவற்றைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2023.08.09 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்ட அத்திட்டத்திற்கான போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், எதிர்பார்க்கப்பட்டவாறு பணிகளை நிறைவு செய்ய முடியவில்லை என்பதால், 2023 திருத்தம் செய்யப்பட்ட செயல் திட்டம், பெறுகைத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்ட ஆவணம் ஆகியவற்றில் திருத்தங்களைச் சேர்த்து 2024 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் , பெறுகைத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

மேலும், 2024 செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த கருத்திட்டங்களில் நடைமுறை ரீதியில் இந்த ஆண்டினுள் செயற்படுத்துவது அசௌகரியமானதாகக் கருதப்பட்ட கருத்திட்டங்களை நீக்கிவிட்டு 2024 செயல் திட்டம் 2024.06.20 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்டு செயற்படுத்துவதற்கு வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2025 ஆம் ஆண்டில், முன்னைய ஆண்டில் ஏற்பட்ட சிக்கல்களைக் குறைத்துக்கொண்டு, மிகவும் வினைத்திறனான முறையில் அந்தத் திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற செயலாற்றுகையை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவன்புடன் அறியத்தருகின்றேன்.

**(உ)** செயல் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, எதிர்காலத்தில் கருத்திட்டங்களை விசேடமானதாக காட்டுவதற்கும், வருடத்தின் ஆரம்பத்திற்கு முன்னர் அடையாளம் காண முடியாது போன அத்தியாவசியமாக

செயற்படுத்தப்பட வேண்டிய ஏதேனும் கருத்திட்டம்/ கருத்திட்டங்களுக்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டால், தேவையான அடிப்படையில் திட்டத்தைத் திருத்தம் செய்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுசெய்து தெரிவித்துக் கொள்கின்றேன்.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட செயல் திட்டங்களின் தூண் இல 04 இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த "சைக்கிள் ஓட்டுபவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்" என்ற கருத்திட்டம் தொடர்பான பெறுகை நடவடிக்கைகளை 2023 மார்ச் மாதத்தில் நிறைவு செய்து சைக்கிள் / மிதி வண்டிகளில் ஒட்டுவதற்கான ஸ்டிக்கர்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா. 2,650,000 செலவு செய்யப்பட்டிருந்த போது , குறித்த ஸ்டிக்கர்களின் விநியோகத்தை விரைவாக மேற்கொள்ளும் எதிர்பார்ப்புடன், இந்தக் கருத்திட்டம் செயல் திட்டத்திலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அவ்வாறு கருத்திட்டத்தின் அலுவல்கள் 2024 செயல் திட்டத்தை தயாரிக்கும் சந்தர்ப்பத்தின் போது செயற்படுத்தப்படவில்லை என்பது கண்டறியப்பட்ட காரணத்தால், குறித்த பிழையைத் திருத்தும் நோக்கில், இந்தக் கருத்திட்டத்தை 2024 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்காக 2024 அமுலாக்கல் / செயல் திட்டத்தில் உட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

**(ஊ)** 2021.02.10 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஒன்பதாவது பாராளுமன்றத்தின் அமர்வின் முதலாவது அமர்வில், இலங்கை பாராளுமன்றத்தின் குழு அறை இல 06 இல் நடைபெற்ற அரசாங்க கணக்குகள் குழுவின் 10 வது கூட்டத்தில், இலங்கைப் பொலிஸ் பிரிவிற்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்களில் காணப்படுகின்ற பற்றாக்குறை தொடர்பாக விவாதிக்கப்பட்டுள்ளதோடு, வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையின் நிதியிலிருந்து அந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாக குழுவினால் உசாவப்பட்டுள்ளது. இதற்காக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு முடியுமென வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபையினால் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 2021.05.17 ஆம் திகதி, போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில், வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுடன் இலங்கைப் பொலீஸ் திணைக்களத்திற்கு,

- 100 லேசர் ட்ரூகெம் ஸ்பீட் மீட்டர்கள் (ஒரு பிரிவுக்கு இரண்டு வீதம் மற்றும் விபத்துக்கள் அதிகமாக இடம் பெறுகின்ற 12 பொலீஸ் பகுதிகளுக்காக).
- நிற கண்ணாடியை பரிசோதிப்பதற்கான 50 இலுமினோஸ் மீட்டர்கள்.

- பிரேக்குகளை பரிசோதிப்பதற்கான 50 டெப்லி மீட்டர்கள்.
- ஒலி/ சத்தம் சோதனைக்கான 5 நொயிஸ் மீட்டர்கள்.

ஆகியவற்றை ரூபா. 150 மில்லியன் செலவில் வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

2023 செயல் திட்டத்தில் ரூபா. 150 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த இந்தக் கருத்திட்டம், 2023 திருத்தம் செய்யப்பட்ட செயல் திட்டத்தை தயாரிக்கும் சந்தர்ப்பத்தின் போது நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை, மேலும் 2023 திருத்தப்பட்ட செயல் திட்டத்தை தயாரிக்கும் போது இந்த கருத்திட்டத்தை செயல் திட்டத்திலிருந்து நீக்கம் செய்வதற்கு தேசிய சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2024 செயல் திட்டத்தை தயாரிக்கும் போது, அதிக வேகத்தில் வாகனம் ஓட்டும் சாராதிகளை அடையாளம் காண்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்களை இலங்கை பொலிஸாருக்கு வழங்குதல் என்ற கருத்திட்டத்தின் மூலம் இதற்காக ரூபா. 50 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதன் பிரகாரம், முன்னர் காணப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிடம் உசாவப்பட்டதோடு, 2024 ஆம் ஆண்டில் ரூபா. 50 மில்லியன் மற்றும் அடுத்த இரண்டு ஆண்டுகளில் ரூபா. 100 மில்லியன் தொகையைக் குறித்த கருத்திட்டத்திற்காகப் பெற்றுக் கொள்வதற்கு இணங்குவதாக வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டில் ரூபா. 50 மில்லியன் தொகையை வழங்குவதற்கான புதிய ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டதோடு, அதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்திற்கான அவதானிப்புகளைப் பெற்றுக் கொள்வதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(எ) 2021 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட வீதிப் பாதுகாப்புப பற்றிய தேசிய சபையின் இலத்திரனியல் நூலகத்தைப் இற்றைப்படுத்தல் மற்றும் அது தொடர்பில் பொதுமக்களை அறிவுறுத்துவதற்கான கருத்திட்டம் 2023 அமுலாக்கல் / செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், திருத்தப்பட்ட 2023 செயல் திட்டத்தில் உட்சேர்க்கப்படாமை தொடர்பில் ஏற்பட்ட தவறு 2024 செயல் திட்டத்தைத் தயாரிக்கும் போது அடையாளம் காணப்பட்டு, அதனை 2024 செயல் திட்டத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், எதிர்காலத்தில், இலத்திரனியல் நூலகத்தை தாபித்தல் நோக்கம் நிறைவேற்றப்படும் அடிப்படையில் அதனை தொடர்ந்து இற்றைப்படுத்துவதற்கும், அது தொடர்பாக பொதுமக்களுக்கு போதுமான

அடிப்படையில் அறிவுறுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தயவன்புடன் அறிவித்துக் கொள்கின்றேன்.



***ஒப்பம்/ ஆங்கிலத்தில்***

**எச்.டி.ஆர். குமாரி ஜயரத்ன**

**தவிசாளர்**

வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை